புதிதாகக் கற்றவர்க்கான வெளியீடு

10651



பாமர மக்களின்
பரம்பரைப் பாடல்கள்

— அழ. வள்ளியப்பா

யுனெஸ்கோ சார்பில் நேஷனல் புத்தக டிரஸ்ட் வெளியிட்டது

புதியதாகக் கற்றவர்க்கான வெளியீடு

பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்

எழுதியவர் : அழ. வள்ளியப்பா

பதிப்பாசிரியர் : கி. சுவாமிநாதன்

1967

புதியதாகக் கற்றவர்களுக்காக
யூனெஸ்கோ சார்பில்
நேஷனல் புத்தக டிரஸ்ட் வெளியிட்டது

Published by:

THE SECRETARY,
NATIONAL BOOK TRUST, INDIA.
23, NIZAMMUDDIN EAST, NEW DELHI-13.

© UNESCO

First Edition : May 1967 / Vaisakhi 1889

Price : 1-25

Printed by: **Asian Printers, Madras-5.**

முன்னுரை

நாடோடிப் பாடல்களையெல்லாம் திரட்ட வேண்டுமென ஒருவர் ஆசைப்பட்டார். ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தையும், பென்சிலையும் எடுத்துக்கொண்டு பாத யாத்திரை புறப்பட்டார். கிராமம் கிராமமாகச் சென்றார். நாலைந்து கிராமங்களில் அலைந்தும், அவருக்கு ஓரிரண்டு பாடல்களே கிடைத்தன. பிறகு, ஒரு குக்கிராமத்திற்குள் புகுந்தார். அப்போது, தூரத்தில் ஆடு மேய்ப்பவன் ஒருவன் பாடும் குரல் கேட்டது. உற்றுக் கேட்டார். சரியாகக் கேட்கவில்லை. ஆயினும், ஆவலோடு சட்டைப் பையிலிருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொண்டார். கூராகத் தீட்டிய பென்சிலையும் தயாராகப் பிடித்துக் கொண்டார். முன்னேக்கி விரைந்து நடந்தார்.

நேரம் ஆக ஆக அவருக்கும் அந்த மாடு மேய்ப்பவனுக்கும் இடையிலிருந்த தூரம் குறைந்துகொண்டே வந்தது. ஓரிடத்தில் வந்ததும், அப்பாடலை அவரால் நன்கு கேட்க முடிந்தது. உடனே செந்தாமரையாக மலர்ந்திருந்த அவர் முகம் வெண்தாமரையாக வெளுத்தது. ஏமாற்றத்தின் அறிகுறி முகத்தில் தென்பட்டது. 'இங்கும் இதே பாடல்தானு?' என்று முணுமுணுத்துக்கொண்டே சட்டைப் பைக்குள் நோட்டுப் புத்தகத்தையும் பென்சிலையும் சலிப்போடு திணித்தார். பாவம், அவன் பாடுவது நாடோடிப் பாடலாக இருக்குமென்று அவர் நம்பிச் சென்ருர். ஆனல் அவன் பாடியதோ ஒரு சினிமாப் பாட்டு!

ஏமாற்றத்திற்கு இடையிலும் அவருக்கு இன்னெரு நம்பிக்கை பிறந்தது. 'அவனிடம் சென்று பேசிப் பார்க்க

லாம். ஒரு வேளை அவனுக்கு ஏதேனும் நாடோடிப் பாடல் தெரிந்தால் குறித்துக்கொள்ளலா மல்லவா?' என்ற சபலத்துடன் காலை எட்டிப் போட்டார்.

''தம்பி, தம்பி'' என்று கூவிக்கொண்டே அருகில் சென்ருர். அவனுடன் பேசிப் பார்த்தார். அவனுக்குத் தெரிந்த பாடல்களையெல்லாம் பாடச் சொல்லிக் கேட்டார். எல்லாமே சினிமாப் பாட்டுக்களாக இருந்தன. ஐந்தாறு மைல் தூரத்தில் உள்ள டூரிங் டாக்கீஸில் அவன் கற்ற பாடல்களே அவை யாவும்.

இப்போதுதான் 'கொட்டகை இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று புதுமொழி சொல்லும் அளவுக்குக் காலம் மாறிவிட்டதே! இனி நாடோடிப் பாடல்களைக் கிராமப்புறங்களில் கேட்பதே அரிதாகிவிடுமோ? இத்தகையதொரு விபத்தில் இருந்து காப்பாற்றவே பலர் நாடோடிப் பாடல்களைத் திரட்டிப் புத்தகமாக வெளியிடும் நற்பணியில் ஈடுபடலாயினர்.

பாடல் உலகிலே நாடோடிப் பாடலை ஒரு குழந்தை எனக் கூறலாம். மழலைத் தன்மை அதிலே இருக்கிறது. மகிழ்ச்சி ஊட்டும் பாங்கும் அதிலே இருக்கிறது. தலைமுறை தலைமுறையாக ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வாய்மொழியாக வந்த இத்தகைய பாடல்கள் நம் நாட்டில் ஆயிரம் ஆயிரம் உண்டு. தமிழ் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு வகையான பாடல்கள் பாமர மக்களின் உள்ளத்தே மலர்ந்து உவகையூட்டி வந்திருக்கின்றன.

கடந்த 30 ஆண்டுகளாகத்தான் நாடோடிப் பாடல்களைத் திரட்ட வேண்டும் என்ற ஆர்வம் நம்மிலே பலருக்கு ஏற்பட்டது. பஞ்சாபைச் சேர்ந்த தேவேந்திர சத்தி

யார்த்தி என்பவர் பல மொழிகளிலும் வழங்கும் நாடோடிப் பாடல்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையுடன் இந்தியா முழுவதையும் சுற்றி வந்தார். அப்போது நம் தமிழ் நாட்டுக்கும் வந்தார். நம் நாட்டு நாடோடிப் பாடல்களைப் பற்றி ஆராயத் தொடங்கினர். அதிலிருந்து நம் நாட்டுப் பெரியோர் சிலருக்கு நாடோடிப் பாடல்களைத் திரட்ட வேண்டும்; நல்ல முறையில் தொகுக்க வேண்டும்; அவற்றிலுள்ள நயத்தை எல்லாம் எடுத்துக் கூறவேண்டும் என்ற பேரார்வம் ஏற்பட்டது. அதன் பயனுகப் பல நாடோடிப் பாடல் தொகுதிகள் வெளிவரத் தொடங்கின. திருவாளர்கள் செ. அன்னகாமு, மு. அருணசலம், பெ. தூரன், ர. அய்யாசாமி. ஆறு. அழகப்பன், ஈழத்தைச் சேர்ந்த திரு. மு. இராமலிங்கம் போன்ற பலர் இப்பணியில் ஈடுபட்டனர். திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பல காலமாக இம்முயற்சியில் ஈடுபட்டு ஏராளமான பாடல்களைத் திரட்டி அவற்றில் சிலவற்றை நூல்களாகவும் வெளியிட்டிருக்கிருர். திரு. நா. வானமாமலை அவர்கள் தம் நண்பர்களின் உதவியாலும், 'நாட்டுப் பாடல்கள் ஆராய்ச்சிக் குழு' என்ற அமைப்பின் முயற்சியாலும் நூற்றுக்கணக்கான பாடல்களைத் திரட்டித் தொகுத்து வெளியிட்டிருக்கிருர். இவர்களைத் தவிர, பல்லாண்டுகளுக்கு முன்பு நீலகிரியில் கலெக்டராயிருந்த பர்ஸி மாக்வீன் என்ற ஆங்கிலேயர் சேகரித்த பாடல்களை திரு. கி. வா. ஜ. வகைபடுத்தித் தொகுத்து 'மலையருவி' என்னும் பெயரில் வெளியிட்டிருக்கிருர். திருவாளர்கள் தமிழண்ணல், சோமலெ முதலியோர் தாலாட்டுப் பாடல்கள் பலவற்றைத் திரட்டி வெளியிட்டிருக்கிருர்கள். மேலே குறிப்பிடப்பட்ட அறிஞர் பலரின் நூல்கள், நான் இதனைத் தொகுப்பதற்குப்

பெரிதும் உதவி உள்ளன. அவர்கள் அனைவருக்கும் பெரி தும் கடமைப்பட்டுள்ளேன்.

நாடோடிப் பாடலில் இனிமை, எளிமை, எவரும் பாடக்கூடிய எளிய மெட்டு—இவை இருப்பதால் ஒரு முறை ஒரு பாட்டைச் சொன்னால் போதும்; உடனே கேட்பவர் மனத்தில் எளிதில் பதிந்துவிடும். இப்படி உள்ளங் கவரக் கூடிய சக்தி பொதுவாகவே எல்லா நாடோடிப் பாடல்களுக் கும் உண்டு. நாடோடிப் பாடல்களைப் போல் கவிதை எழுத முற்பட்ட கவிஞர்கள், மக்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளனர் என்பதை நாமறிவோம். பாரதியிலிருந்து இன்று சினிமாத்துறையில் புகழ்பெற்றிருக்கும் கவிஞர்கள் வரை இதற்குச் சான்றாக விளங்குகின்றனர். பாரதியார் தாம் இயற்றியுள்ள பாஞ்சாலி சபதத்தில் தருமன் சூதாட் டத்திலே தோல்வியுற்று நிற்கும் காட்சியை நமக்குக் காட்டும்போது,

> மாடிழந்து விட்டான் - தருமன்
> மந்தை மந்தையாக.
> ஆடிழந்து விட்டான் - தருமன்
> ஆளிழந்து விட்டான்.

என்று எவ்வளவு எளிய சொற்களில், எளிய சந்தத்தில் அமைத்துள்ளார்! இதுபற்றிப் பாரதியாரே எழுதியிருக்கும் குறிப்பைப் பாருங்கள்: 'தெருவில் ஊசிகளும், பாசி மணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கின்ற பெண்கள், மாயக் காரனம்மா — கிருஷ்ணன் மகுடிக் கார னம்மா என்று பாடும் நடை, சூதாட்ட வருணனைக்கும் அதிலே ஏற்படும் பரபரத்த வார்த்தைகளையும் செய்கை களையும் விளக்குதற்கும் மிகவும் பொருந்தியதென்பது

எளிதிலே காணப்படும்' என்கிறார் பாரதியார். இதிலிருந்தே நாடோடிப் பாடல்களின் உள்ளம் கவரும் சிறப்பினை எளிதிலே உணர்ந்து கொள்கின்றோம்.

பேச்சு வழக்கில் 'ஒன்று' என்பதை 'ஒண்ணு' என்று கூறுகிறோம். அதேபோல், பல சொற்கள் இங்குள்ள நாடோடிப் பாடல்களில் சிதைந்து காணப்படும். மாதிரிக்குச் சில :

மூன்று - மூணு; அரியென்று - அரியிண்ணு; ஊற்று-ஊத்து; இரண்டு - ரெண்டு; வருகிறார் - வாறார்; வேண்டும் - வேணும்; வியாபாரம் - யாவாரம்; இழுக்கவில்லை என்று - இழுக்கலெண்ணு; மகாபலி - மாவலி.

இந்தப் பாடல்களிலே ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால், எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு இவை பாடப்பெற்றவை. இவற்றைப் பாடியவர் பெயர் தெரியாது; ஊர் தெரியாது; எப்போது எழுதினார் என்பதும் தெரியாது. இப்போது பாடுகின்ற ஒரு நாடோடிப் பாடலை நம் தாத்தாவும், பாட்டியும் பாடியிருக்கலாம். அந்தத் தாத்தாவுக்குத் தாத்தாவும், பாட்டிக்குப் பாட்டியும் கூடப் பாடியிருக்கலாம். இப்படி எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்பு பாடிய பாடலை இன்றுள்ள நாமும் பாடி மகிழ்கின்றோம் என்றால் அதிலே ஒரு பாச உணர்ச்சி ஏற்படுகிறதல்லவா? பரம்பரை பரம்பரையாக நமக்கு வந்துள்ள இச்சொத்தை இனி வரப்போகின்ற பரம்பரையினருக்கும் அழியாமல், குறையாமல் கொடுக்கவேண்டியது நம் கடமை அல்லவா?

ஆசிரியர்.

பொருளடக்கம்

	முன்னுரை	iii
1.	பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்	1
2.	அன்னையின் பாட்டு அமுதப் பாட்டு	14
3.	தாலாட்டுப் பாட்டிலே தாயின் கதை	37
4.	மகிழ்ச்சியூட்டும் மழலைப் பாடல்கள்	47
5.	சிரிக்கவைக்கும் சிறுவர் பாடல்கள்	61
6.	உற்சாகமூட்டும் உழவர் பாடல்கள்	77
7.	தோழனாய் உதவும் தொழிலாளர் பாடல்கள்	89
8.	சொக்கத் தங்கம் ஜம்புலிங்கம்	102

1. பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்

கிராம மக்களில் பெரும்பாலோர், தங்களுக்கு நன்மை ஏற்பட்டால், அது தெய்வத்தால் வந்தது என்று கூறிப் போற்றுவார்கள். அதே போல், தீமை ஏற்பட்டாலும் அது தெய்வத்தின் கோபத்தால் வந்தது என்று நினைத்துப் பயத்துடன் தெய்வங்களை வேண்டிக் கொள்வார்கள். இதனுல் அவர்களிடத்திலே 'பயபக்தி' மிகுந்திருப்பதைக் காணலாம்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ருர் மகாகவி பாரதியார். உழவையும் தொழிலையும் தெய்வத்துடன் இணைத்துப் பாடும் பல பாடல்கள், நாட்டுப் புறங்களில் பரம்பரை பரம்பரையாகப் பாடப் பட்டு வருகின்றன. ஏற்றம் இறைக்கும் போது, நாற்று நடும் போது, சுண்ணம் இடிக்கும் போது, படகு ஓட்டும் போது, பாரம் தூக்கும் போது அவர்கள் பரவசத்தோடு பாடுகின்ற பாடல்களில், பற்பல தெய்வங்களின் பெருமைகளைக் கேட்டு மகிழலாம். இன்னும், தாலாட்டும் போதும், கரகம் ஆடுதல், காவடி எடுத்தல், கோணங்கி பார்த்தல், தீ மிதித்தல்

போன்ற சமயங்களிலும் எத்தனையோ தெய்வப் பாடல்களை அவர்கள் பரவசத்துடன் பாடுகின்றனர்.

ஊரிலே வைசூரி முதலிய கொடிய நோய்கள் பரவினால், அந் நோய் மாரியம்மனின் கோபத்தால் வந்ததாக நினைத்து, மாரியம்மனின் கருணையை வேண்டுகிறார்கள்.

பக்தி மிகுந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பிள்ளையார், சரஸ்வதி, முருகன், கண்ணன், சிவன் போன்ற பல தெய்வங்களைப் பற்றிய பாடல்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். மிக எளிமையாகவும், குழந்தைகளே விரும்பிப் பாடக்கூடியதாகவும் உள்ள சில பழங்காலப் பாடல்களை முதலில் பார்க்கலாம்.

இரவு நேரம். ஒரு சிறுவன் படுப்பதற்காகப் பாயை விரிக்கிறான். விரித்தவன், உடனே அதில் விழுந்து படுத்துவிடவில்லை. விரித்த பாயில் நன்றாக உட்கார்ந்துகொள்ளுகிறான். உட்கார்ந்தபடியே, இரு கண்களை மூடி, இரு கைகளையும் சேர்த்துக் கும்பிடுகிறான். கும்பிட்டபடியே பாடுகிறான்.

அரியின்னு பாய்விரிச்சு
அச்சுதான்னு பேர்சொல்லி
கிருஷ்ணன்னு படுத்தவர்க்குக்
கேடில்லே ஒருநாளும்.
கோவிந்தான்னு படுத்தவர்க்குக்
குறைவில்லே ஒருநாளும்.

பொழுது விடிவதற்குச் சற்று முன்பாகவே எழுந்துவிடுகிறான் அச்சிறுவன். எழுந்தவன், பாயில் உட்கார்ந்தபடியே கீழ்க்கண்ட பாடலைப் பாடுகிறான்.

பொழுதெப்ப விடியும்?
பூஎப்ப மலரும்?
சிவன்எப்ப வருவார்?
வரன்எப்பத் தருவார்?

குழந்தைகள் மனத்திலே பக்தி விதையைப் பாவுகின்ற இப்பாடல்களில், மற்றொரு சிறப்பையும் காணமுடிகிறது. இரவு தூங்குவதற்கு முன்பு திருமாலை நினைத்து வேண்டிக் கொள்ளும் சிறுவன், காலையில் எழுந்ததும் சிவனை நினைத்துத் துதி பாடுகிறான். 'அரியும் சிவனும் ஒன்று' என்னும் பரந்த மனப்பான்மை வளரவும் இப்பாடல்கள் உதவுகின்றன அல்லவா?

பிள்ளைகள் பாடுவது போலவே ஏற்றக்காரர்களும் சைவத்தையும் வைணவத்தை

யும் இணைத்து ஏற்றப் பாடலில் பாடுவார்கள். இந்தப் பாடலில் பிள்ளையாரையும், பெருமாளையும் தங்களுக்குத் துணையாக வந்து நிற்க வேண்டுமென வேண்டிக்கொள்கிறார்கள். அது மட்டுமா? சிவனும் பெருமாளும் சேர்ந்து ரதம் ஏற வேண்டுமென அழைக்கிறார்கள்.

பிள்ளையாரே வாரீர்! பெருமாளே வாரீர்!
பெருமாளே வாரீர்! சிவனாரே வாரீர்!
சிவனும் பெருமாளும் சேர்ந்துரதம் ஏற
குருவும் பெருமாளும் கூடிரதம் ஏற
ஹரியும் சிவனாரும் பெரியரதம் ஏற
நானும் பெருமாளும் நடுங்கிப் பணிசெய்ய
ராமரே துணைவா; ராகவரே தண்டம்.
ரட்சிப்பதுன் பாரம்......

'எங்களைக் காப்பாற்றுவது உன் பாரம்' என்று கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு ஏற்றம் இறைக்கின்றனர்.

மழையை நம்பித்தான் விவசாயம் செய்யப்படுகிறது. மழையில்லாதுபோனால் வரட்சி ஏற்பட்டுப் பயிர்கள் விளையாமல் போகிறது; பஞ்சம் ஏற்படுகிறது. ஆகையால், மழை பெய்ய வேண்டுமென எல்லாத் தெய்வங்களையும் கிராம மக்கள் வேண்டிக்கொள்வார்கள்.

சந்திரரே சூரியரே
சாமி பகவானே

இந்திரரே வாசுதேவா
இப்பமழை பெய்யவேணும்.
மந்தையிலே [illegible] வா. ஜ.
மலேமேலே '[illegible]'
இந்திரரே சூரியரே
இப்பமழை பெய்யவேணும்.

மலேயாள தேசத்தில் மகிமை மிகுந்து விளங்கும் பகவதி அம்மனேயும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிருர்கள்.

மலேயாள பகவதியே
மனங்குளிர்ந்த கூத்தனுச்சி
மழையை இறக்கிவிடு
மானுடங்க கையெடுக்க.

கூட்டு முயற்சியால், பெரிய பெரிய செயல்களையெல்லாம் எளிதிலே செய்து முடிக்கலாம் என்பதைக் காட்டுகிறது, ஊரார் கூடித் தேர் இழுக்கும் காட்சி. தேர் வடம் பிடித்து இழுக்கும்போது பாடுகின்ற ஒரு பாட்டின் பகுதியைக் கேளுங்கள்.

தேரசைய ஏலேலோ
ரதம்குலுங்க ஐலசா
தேசத்தாரே ஏலேலோ
கையெடுக்க ஐலசா
கைடுயெத்த ஏலேலோ
பேர்களுக்கு ஐலசா

கைலங்கிரி ஏலேலோ
போனபலன் ஐலசா
பாக்குநல்ல ஏலேலோ
மரம்பிளந்து ஐலசா
பழநியப்பன் ஏலேலோ
தேருசெய்து ஐலசா
தேரசைய ஏலேலோ
ரதம் துலுங்க ஐலசா
தேசத்தாரே ஏலேலோ
கையெடுக்க ஐலசா

கரகம் ஆடுபவர்கள், பூவோடு கூடிய குடத்தைத் தலைமேல் தானுக நிற்கச்செய்து ஆடுவார்கள். அப்போது அவர்கள் எத்தனையோ விதமான ஆட்டங்களை ஆடுவார்கள். ஆடிக்கொண்டே பாடுவார்கள். ஆனுலும், கரகம் தலையில் வைத்தபடியே இருக்கும். "ஓகோ, என்தாயே" என்று முதல் அடியிலும் "இப்போ—தாயே" என்று அடுத்த அடியிலும் மாறி மாறி வரும் ஒரு பாடலைக் காண்போம். ஒவ்வொரு கரகமாகப் பத்துக் கரகங்களைப் பாடுகிருர்கள்.

ஒண்ணுங் கரகமடி கன்னி—ஓகோ—என்
தாயே
ஓடிவந்து பூசைவாங்கு இப்போ—தாயே
ரெண்டாங் கரகமடி கன்னி—ஓகோ—என்
தாயே

ரணகரகம் பொன்ஞலே இப்போ—தாயே
மூஞுங் கரகமடி கன்னி—ஓகோ—என்தாயே
முத்தாலே பொன்கரகம் இப்போ—தாயே

என்று பாடி ஆடியபடியே நடப்பார்கள். கடைசி வரிகளைப் பாடும்போது மாரியம்மன் வாசலிலே வந்து நின்றுவிடுவார்கள். அதற்குப் பொருத்தமாகப் பாட்டு அமைந்திருக்கிறது.

பத்தாங் கரகமடி கன்னி—ஓகோ—என்
தாயே
பணிந்தாடும் பொன்கரகம் இப்போ—
தாயே
பத்துஞ் சொல்லி முடிந்ததடி கன்னி—
ஓகோ—என்தாயே
பத்தினிஉன் வாசலிலே இப்போ—தாயே

கடுமையான விரதங்கள் இருந்து முருகனுக்குக் காவடி எடுப்பவர்கள் பலர். "அரோகரா, அரோகரா" என்றும், "வேல்முருகா, வேல்" என்றும் பக்திப் பெருக்கோடு பாடிக்கொண்டே காவடி எடுப்பார்கள். அவ்வாறு பாடப்படும் பிரபலமான பாடலில் சில பகுதிகள் இங்கு உள்ளன :

எட்டடிக் குச்சுக்குள்ளே—சுப்பையா
எப்படி நானிருப்பேன்?

தங்க மயிலேறிச்—சுப்பையா
வந்திட வேணுமையா

* * *

ஆறும் பெரியாறு—சுப்பையா
ஆறு முகனுறு
இந்த ஆறு கடந்து—சுப்பையா
எப்படி நான்வருவேன்

காவடிக் கூட்டங்களாம்—சுப்பையா
கருமலைச் சந்நதியாம்
தீர்த்தக் குகை நோக்கி—சுப்பையா
சென்று வழிநடப்போம்.

பெண்கள் கும்மியடிக்கும்போது, அவர்களின் குதூகலத்தைப் பார்க்கவேண்டுமே! உடல் குலுங்க, உள்ளம் குளிர அவர்கள் பாடும் கும்மிப் பாட்டில் பல தெய்வங்கள் வருவதுண்டு.

ஒரு கும்மிப் பாட்டின் துவக்கத்திலே சிறுமியர் கலைமகள் வணக்கம் பாடுகிறுர்கள்.

பாட்டறிவும் படிப்பறிவும் எங்கள்
பள்ளிக் கூடத்திலே உன்னறிவும்
ஏட்டறிவும் எழுத்தறிவும் தந்து
எங்கள் வாயில்வந்த சரஸ்வதியே

'வள்ளியம்மை கும்மி' என்று ஒரு கும்மிப்பாட்டு உண்டு. அது மிக நீண்ட கதைப் பாடல். கேட்கக் கேட்கச் சுவையா

யிருக்கும். அப்பாட்டின் ஆரம்ப வரிகளிலே பொருளடக்கத்தைக் கூறிவிடுகிறார்கள்.

வாங்கடி வாங்கடி தோழிப்பெண்காள்—
வள்ளி
மாமயில் பாட்டைப் படியுங்கடி
கானலில் இருந்த மாமயிலைக்—கந்தன்
கண்ட கதையைப் படியுங்கடி.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V.S. IYER LIBRARY

வேடனாக வந்த வேலவன் திடீரென்று வேங்கை மரமாகி நிற்பதைக் காட்டி, வள்ளி அண்ணன்மாரிடம் தன் பயத்தை வெளியிடுகிறாள். அப்போது அண்ணன்மார்கள் கூறுகிறார்கள் :

பயப்படாதேமானே வள்ளியம்மா உனக்குப்
பரமன் கந்தவேள் துணையிருப்பான்
பட்சமா இப்போது பாங்கிப் பெண்ணோடே நீ
பயமில் லாமேஇரு பச்சைக்கிளி.

அவர்கள் கூறியது போல கந்தவேள் அவளுக்கு அப்போது மட்டுமல்ல, எப்போதுமே துணையாக - துணைவனாகிவிட்டா னல்லவா?

'ஒயில் கும்மி' என்று ஓர் ஆட்டமுண்டு. ஆண்களாகவே சேர்ந்து இதில் ஆடுவார்கள். காலிலே சதங்கை மணிகளைக் கட்டிக்கொண்டு கையிலே கைக்குட்டைகளை வைத்துக்கொண்டிருப்பார்கள். குதித்துக் குதித்தும் உட்கார்ந்தும் எழுந்திருந்தும் ஆடுவார்கள். பாட்டின் துவக்கத்தில் கணபதி, கந்தன், சரஸ்வதி, முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோரின் அருளை வேண்டிப் பாடுகிறார்கள்.

முந்தி முந்தி விநாயகனே—சுருளி
முப்பத்தி முக்கோடி தேவர்களே

கந்தக் குழந்தைக்கு முன்பிறந்த—மகா
கச்சிக் கணபதி முன்நடவாய்.

ஏழைகளின் தாயே வாலேசரஸ்வதி
என்நாவில் வந்துநீ அருள்புரிவாய்

இப்படித் துவங்கி, 'காலோடு கால் உரசாமல் காலடிக் கச்சம் கழருமல், மேலோடு மேல் உரசாமல் வேருவைத் தண்ணீர் சிதருமல் ஆடவேண்டும்' என்று பாடி முடிப்பார்கள்.

பாமரர் பாடல்களில் மாரியம்மன் பாட்டு பல இடங்களில் பாடப்பட்டு வருகிறது. பொங்கலிட்டும், தீ மிதித்தும், தீச்சட்டி தூக்கியும், கரகம் எடுத்தும் மாரியம்மன் புகழைப் பாடுகிருர்கள்.

'உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா' என்று பாரதியார் பாடியிருக்கும் பாடலின் மெட்டைப் போலவே, பலலாண்டுகளாக வழங்கிவரும் முத்துமாரியம்மன் பாட்டு ஒன்று உண்டு. அதில் சிங்கத்தின் மேல் ஏறிவரும் அம்மனைப் பற்றிப் பல பாடல்கள் பாடப்படுகின்றன. எந்த எந்த ஊர்களில் சிறப்பாக மாரியம்மனை

வழிபடுகிருர்கள் என்பதையும் அப் பாடலைக் கேட்டே தெரிந்துகொள்ளலாம்.

ஆதியிலே அமைந்த சக்தி
எங்கள் முத்துமாரி—அம்மா
ஆள்கிருளாம் பூமியெல்லாம்
சிங்கத்துமேல் ஏறி.

அடுத்தால் சமயபுரம்
எங்கள் முத்துமாரி—அம்மா
ஆதிசிவன் பெண்சாதியாம்
சிங்கத்துமேல் ஏறி.

கன்னபுரம் வந்திருப்பாள்
எங்கள் முத்துமாரி—அம்மா
புன்னை நல்லூர் வந்திருப்பாள்
சிங்கத்துமேல் ஏறி.

இவ்வாறு, தஞ்சாவூர், நார்த்தாமலை, வீராம் பட்டணம், தாராபுரம் முதலிய பல இடங் களிலுள்ள மாரியம்மனின் பெருமைகளைப் பாடுகிருர்கள்.

மாரியம்மன் கோயில் திருவிழாக்களில் தீச்சட்டியைக் கையில் தாங்கியபடியே சிலர் வழிபடுவார்கள். அப்போது பாடப்படும் ஒரு பாடலின் முற்பகுதியில், அம்மனுக்குப் பூ எடுப்பதைப் பற்றி மிக அழகாகக் கூறப் படுகிறது.

கையாலே பூ வெடுத்தா—மாரிக்கு
காம்பழுகிப் போகுமிண்ணு

விரலாலே பூ வெடுத்தா
வெம்பிடுமென்று சொல்லி

தங்கத் துரட்டி கொண்டு—மாரிக்கு
தாங்கி மலரெடுத்தார்.

வெள்ளித் துரட்டி கொண்டு
விதமலர்கள் தானெடுத்தார்.

எட்டாத பூமலரை—மாரிக்கு
ஏணிவைத்துப் பூவெடுத்தார்.

பத்தாத பூ மலரை
பரண் வைத்துப் பூவெடுத்தார்.

இதே போல் தாலாட்டுப் பாடலிலும், பலவகைத் தொழிற் பாடல்களிலும் பக்தி மணம் கமழுவதை நாம் காணலாம்.

2. அன்னையின் பாட்டு அமுதப் பாட்டு

தொட்டிலில் படுத்திருக்கும் குழந்தை 'வீல், வீல்' என்று அழுகிறது. உடனே, பக்கத்திலே பாடம் படித்துக்கொண்டிருந்த அண்ணன், கிலுகிலுப்பையை எடுத்துக் குழந்தையின் முன்னுல் ஆட்டிக் காட்டுகிருன். சத்தம் கேட்டுக் குழந்தையின் அக்காள் ஓடிவருகிருள். பலூன் ஒன்றை ஊதி, குழந்தையின் முகத்திற்கு முன்னுல் காட்டுகிருள். குழந்தையின் அப்பா அங்கே வருகிருர். தம் கைகள் இரண்டையும் சப்பாணி கொட்டுவது போல் கொட்டி வேடிக்கை காட்டுகிருர். என்ன செய்தும் குழந்தையின் அழுகை நிற்கவில்லை. சத்தம் இன்னும் அதிகமாகிறது.

அடுக்களையில் இருக்கும் தாய், சத்தம் கேட்டு ஓடோடி வருகிருள். தொட்டிலைப் பிடித்து ஆட்டிக்கொண்டே 'ஆராரோ, ஆரிவரோ' என்று பாடத் தொடங்குகிருள். அடுத்த விநாடியே குழந்தையின் அழுகைச் சத்தம் குறைய ஆரம்பிக்கிறது. தாயின் பாட்

டைக் கேட்கக் கேட்க, குழந்தையின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது. சிறிது நேரத்தில், அழுகை ஓய்ந்து அமைதி ஏற்படுகிறது. குழந்தையும் நிம்மதி யாகத் தூங்கிவிடுகிறது. குழந்தையின்

அழுகையை நிறுத்தி, அதை அமைதியாகத் தூங்க வைக்கும் சக்தி, தாய் பாடுகின்ற தாலாட்டுப் பாட்டுக்கு இருக்கின்றது. அழுகையை நிறுத்துவதோடு தூங்க வைக்கவும் தாலாட்டுப் பாட்டு மிகவும் உதவுகிறது.

பரம்பரை பரம்பரையாகத் தமிழ்நாட்டில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. அவற்றின் எண்ணிக்கைக்குக் கணக்கே இல்லை. தாலாட்டுப் பாடல்களில், தாயின் வற்றாத அன்பைக் காணலாம்; அழகிய கற்பனைகளைக் காணலாம்.

குழந்தையைத் தாய் எப்படி எப்படியெல்லாம் சொல்லிக் கொஞ்சுகிறாள் என்பதை இதோ இந்தப் பாடல்கள் கூறுகின்றன.

காட்டுக் கரும்பே—கண்ணே
கணுவில்லாச் செங்கரும்பே
வேலிக் கரும்பே—கண்ணே
விலையில்லா மாணிக்கமே.

*　*　*

வானத்து மீனோ ?
மேகத்து மின்னலோ ?—நீ
தாகத்தைத் தீர்க்க வந்த
தங்க இளநீரோ ?

*　*　*

மாத்துயர்ந்த பொன்னே—கண்ணே நீ
மண்டலத்து ராசாவோ ?
பூத்த புதுப்பூவே—கண்ணே உன்
பொக்கிஷத்தைப் பார்த்தாயோ ?
மானே மருக்கொழுந்தே—கண்ணே நீ
மலர் விரித்த மல்லிகைப்பூ
காட்டுக் குயிலே—கண்ணே நீ
கண்டெடுத்த பாட்டுக் குயில்.

* * *

வாழைப்பழ மேனி
வைகாசி மாங்கனியே
கொய்யாப் பழமேனி—நான் பெத்த
கொஞ்சிவரும் ரஞ்சிதமே !

* * *

தேனே திரவியமோ ?
தெவிட்டாத தெள்ளமுதோ ?
மாசி வடுவோ ?—என் கண்ணே
வைகாசி மாம்பழமோ ?
கோடைப் பலாச்சுளையோ ?
கொஞ்சவந்த ரஞ்சிதமோ ?

கரும்பென்றும், கனியென்றும், பூ என்றும், பொன் என்றும் கூறிப் போற்றுகிருள் அன்னை. மாசியில் மாவடுவும், வைகாசியில் மாம்பழமும், கோடையில் பலாச்சுளையும் எவ்வளவு சுவையாக இருக்கும் என்பதை அநுபவத்தால் உணர்ந்து பாடுகிருள்.

குழந்தையை 'முத்து' என்று அழைப்பதிலே மற்ெருரு தாய் மகிழ்ச்சி அடைகிருள். ஆனல், அது சாதாரண முத்தா? இல்லை, இல்லை!

முத்தான முத்து
முதிரா இளமுத்து.
காரமடை ரங்கருக்குக்
கழுத்திலிடும் ராணிமுத்து.
ஆயிரம் முத்திலே
ஆராய்ந்து எடுத்த முத்து.
சீரங்க நாதருக்குச்
சிரசிலிடும் ராணிமுத்து.
தொள்ளாயிரம் முத்திலே
துளாவி எடுத்தமுத்து.
மதுரை மீனுட்சிக்கு
மார்பிலிடும் மணிமுத்து.

முத்தாக வைத்துக் குழந்தையைப் பாடுகிருள் தாய். அந்தப் பாட்டிலே வரும் சொற்களும் முத்து முத்தாகவே இருக்கின்றன. வயிற்றிலே பிறந்த குழந்தையை, தன் மனத்திலே பிறந்த கற்பனையால் பாடிக் களிப்படைகிருள்.

குழந்தையினுடைய உடலை 'வாழைப்பழ மேனி' என்றும் 'கொய்யாப்பழ மேனி' என்

றும் கூறுகின்ற தாய், அந்த மேனி எவ்வளவு மென்மையானது என்பதையும் கூறுகிருள்.

தங்கத் திருமேனி—என் கண்ணே
உனக்குத்
தண்ணீர் பட்டால் கொப்பளிக்கும்
பொன்னுத் திருமேனி—என் கண்ணே
உனக்குப்
பூவுபட்டால் கொப்பளிக்கும்.

வெந்நீரல்ல; தண்ணீர் பட்டாலே கொப்பளித்து விடுமாம் அந்தத் தங்கத்திருமேனி! பூப்பட்டாலும் நொந்து போகுமாம்! அப்படியென்ருல் பூவைவிட மென்மையானது அக்குழந்தையின் உடம்பு. இல்லையா ?

குழந்தையின் மகிமையை ஒரு தாய் பாடுகிருள்.

பூக்காத நந்தவனம்—என் கண்ணேநீ
போய்ப் புகுந்தால் பூத்துவிடும்
காய்க்காத நந்தவனம்—என் கண்ணேநீ
கால்மிதித்தால் காய்த்துவிடும்.

பிள்ளையின் பெருமையை இதற்கு மேல் எப்படிக் கூற முடியும்? பெரும் பெரும் புலவர்களால்கூட இப்படிப் பாட முடியுமா என்பது சந்தேகமே.

பெற்ற குழந்தையின் பெருமையைப் பாடுவதோடு, தான் பிறந்த வீட்டின் பெருமையையும், பிறந்த வீட்டில் உள்ளவர் களின் பெருமையையும் மிக அழகாகப் பாடுகிருள் தாய்.

செல்வத்தி லேபிறந்தேன்—கண்மணியே
செல்வத்தி லேவளர்ந்தேன்
ஆடு என்ன, மாடு என்ன—கண்மணியே
காடு என்ன, வீடு என்ன
முத்து என்ன, ரத்னம் என்ன-கண்மணியே
சொத்து என்ன, கெத்து என்ன
வகை வகையாய் நகைகள் என்ன—
கண்மணியே
ஜதை ஜதையாய் நகைகள் என்ன
சாரட்டு வண்டி என்ன—கண்மணியே
சலங்கை போட்ட வண்டி என்ன

குழந்தையின் பாட்டஞர், ஐயா (தாத்தா), மாமன் ஆகியவர்களைப் பற்றி வழங்கும் பாடல்கள் ஏராளம். தந்தையைப் பற்றியும், அண்ணன், அத்தை முதலியவர்களைப் பற்றி யும் பல பாடல்கள் கூறுகின்றன.

பாட்டஞர் எல்லையிலே
பட்டு வந்து விற்குதென்று
பட்டு விலை மதிக்கும்
பாண்டி மன்னர் உன் பாட்டன்.

முப்பாட்டன் எல்லையிலே
முத்து வந்து விற்குதென்று
முத்து விலை மதிக்கும்
முடி மன்னர் உன் பாட்டன்.

தாத்தாவின் சிறப்பை விளக்கும் வரிகளைக் கீழே காணலாம்.

குளிக்கக் குளமும் வெட்டி
கும்பிட வோர் கோவில் கட்டி
படிக்க மடம் கட்டி வைத்த
பாண்டியனார் பேரனோ ?

மலை மேல் முருகருக்கு
மண்ணின்மேல் பொங்கலென்று
குடம் எடுத்துப் பால்கறக்கும்
கொற்றவர்கள் பேரனோ ?

தவலை கொண்டு பால்கறக்கும்
தருமரது பேரனோ ?

பெண் குழந்தையாக இருந்தால், 'பேரனோ' என்பதைப் 'பேத்தியோ' என்றும் 'தூங்கிடப்பா' என்பதைத் 'தூங்கிடம்மா' என்றும் மாற்றிப் பாடுவார்கள்.

மாமனின் மகிமையைத் தாலாட்டிலே எடுத்துரைக்கிருள் தாய். பள்ளியில் பிள்ளையைச் சேர்க்க அவர் எப்படி வருவார்,

அவர் எப்படிப் பட்டவர் என்பதையெல்லாம் கூறுகிருள்.

வெள்ளியால் செய்த ஏட்டில்
வைர எழுத்தாணி கொண்டெழுத
பள்ளியில் சேர்க்க மாமன்
பரிவுடன் வந்திடுவான்.

தங்கத்தால் காகிதமாம்
தனித்தெழுதும் பேஞவாம்
பேஞ பிடித்தெழுதும்
பெரிய துரை உன்மாமன்.

பூ வியாபாரம் செய்யும் மாமன், குழந்தைக்கு என்ன என்ன கொண்டுவருவார் என்று கூறி ஒரு தாய் பாடுகிருள்.

மதுரையிலே கூடாரம்—உங்க மாமன்
மல்லிகைப்பூ யாவாரம்
மல்லிகைப்பூ விற்றவுடன்—உன் மாமன்
மாலே ஒண்ணு கொண்டாருவார்

கோடையிலே கூடாரம்—உன் மாமன்
கொத்துமல்லி யாவாரம்
கொத்துமல்லி விற்றவுடன் - உங்க மாமா
கொலுசுபண்ணிக் கொண்டாருவார்

வேட்டைக்குப் போகிருர் சின்ன மாமன். அவருடைய வீரத்தைப் பற்றிக் குழந்தையிடம் கூறுவதிலே தாய்க்கு ஓர் இன்பம்.

காட்டைக் கலேத்து உங்க மாமன்
கடிநாயை ஏவிவிட்டு,
வேட்டைக்குப் போராக
வீரபுலி உங்க மாமன்.

பன்றி படுமோ
பதினெட்டு மான் படுமோ,
சிங்கம் புலி படுமோ - உங்க
சின்ன மாமன் வேட்டையிலே.

குழந்தையின் தந்தையைப் பற்றிப் பாடும் ஒரு தாலாட்டில், கடவுளுக்குச் சாத்துவதற்காக அவர் நந்தவனத்தில் பூ எடுப்பதையும், ஐந்துதலே, பத்துத்தலே நாகங்களுக்குக்கூடப் பயப்படாத அவரது துணிச்சலேயும் காண்கிறோம்.

ஐந்து தலேநாகம்
அடைகாக்கும் நந்தவனம்
அஞ்சாது பூவெடுக்கும்
அருச்சுனரோ உங்களப்பன்?

பத்துத் தலேநாகம்
படுத்திருக்கும் தாழையிலே
பாராது பூவெடுக்கும்
பாண்டியரோ உங்களப்பன்?

தவமிருந்து பெற்ற பிள்ளேயின் தாய், குழந்தையினுடைய தந்தையின் சிறப்பைக்

கூறுகிருள் மற்ருெரு பாடலில். தமிழ் வளர்த்த பாண்டியன் என்று அவரைக் கூறி, அவர் எத்தகைய சிறப்புடன் விளங்குகிருர் என் பதையும் வர்ணிக்கிருள். பாடிப்பாடி இன்பம் அடையத் தக்கது இந்தப் பாடல்.

தெள்ளுதமிழ் வளர்த்த
    தென்னவராம் பாண்டியர்க்குப்
பிள்ளைக்கலி தீர்த்த
    பெருமானும் நீதானே ?

மாம்பழத்தைக் கீறி
    வயலுக்கு உரம் போடும்
தேன் பாய்ந்து நெல்விளையும்
    செல்வமுளார் புத்திரனே ?

வெள்ளித் தேர்பூட்டி
    மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும்
    அதிட்டமுள்ளார் புத்திரனே ?

வாரிப் படியளக்கும்
    மகிமையுள்ளார் புத்திரனே ?

குழந்தைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அண் ணன்மார் இருக்கிருர்கள். ஆனாலும், குழந் தைக்குச் சின்ன அண்ணன் மேல் பிரியம் அதிகம். தாய்க்கும் அவன்மேல் தனியான ஓர் ஆசை உண்டு என்பதை எவ்வாறு

அவள் வெளியிடுகிருள் !

சின்னண்ணன் வந்தானே
- கண்ணே உனக்குச்
சின்னச் சட்டை கொடுத்தானே?
பட்டு ஜவுளிகளும்
- கண்ணே உனக்குப்
பல வர்ணச் சட்டைகளும்
பட்டுப் புடவைகளும்
- கண்ணே உனக்குக்
கட்டிக்கிடக் கொடுத்தானே?

பொன்னுல் எழுத்தாணியும்
- கண்ணே உனக்கு
மின்னேலைப் புஸ்தகமும்
கன்னுரே பின்னுரெண்ணு - உனக்குக்
கவிகளையும் கொடுத்தானே?
சின்னஞ்சிறு விரலுக்குக் - கண்ணே
சிறப்பான மோதிரமும்
தன்னந் தனியாவந்து
தந்தானே சின்னண்ணன்?

கிழமைகளை வைத்தும், மாதங்களை வைத்தும் ஒரு சில தாலாட்டுப் பாடல்கள் உண்டு. கிழமைப் பாட்டிலே திங்கட் கிழமையில் ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை வரை வரிசையாகச் சொல்லிக்கொண்டே

வருகிருள் தாய். ஒவ்வொரு கிழமையிலும் தன் குழந்தை நியாயப்படி நடக்கவேண்டும் என்று அறிவுரை கூறுகிருள்.

திங்கட் கிழமையிலேதான்
—கண்ணே நீ
தேர்பார்க்கப் போகையிலும்
செவ்வாய்க் கிழமையிலேதான்
—கண்ணே நீ
செவந்திப்பூ வைக்கையிலும்
புதன்கிழமை விதம்விதமாக்
—கண்ணே நீ
பூந்திலட்டுத் தின்கையிலும்
வியாழனெல்லாம் வெளியேருமே
—கண்ணே நீ
வீட்டுக்குள்ளே இருக்கையிலும்
வெள்ளியிலே விளக்கேற்றிக்
—கண்ணே நீ
வீணைச்சுதி ஏற்றையிலும்
சனிக்கிழமை பணத்தை எண்ணிக்
—கண்ணே நீ
சந்தோசமா யிருக்கையிலும்
ஞாயிற்றுக் கிழமையிலும்—கண்ணே நீ
ஞாயவழி நடந்து போடி.

இதே போல், சித்திரை மாதத்தில் ஆரம்பிக்காமல், மார்கழி மாதத்தில் தொடங்கிக்

கார்த்திகை வரையுள்ள பன்னிரண்டு மாதங் களிலும் குழந்தை என்ன என்ன செய்ய வேண்டும் என்று தாய் கூறுகிருள். எது செய்தாலும் கடவுளை மறக்கக் கூடாது என்பதை,

கார்த்திகை மாசத்திலும் கண்ணே நீ
கடவுளுக்குக் கையெடடி.

என்று கூறி முடிக்கிருள்.

'ஆரடித்தார்? ஏனழுதாய்?'' என்று, அழும் குழந்தையைப் பார்த்துத் தாய் கேட்கும் பாடல் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் பல விதமாகப் பாடப்படுகிறது.

ஆரடித்தார் ஏன் அழுதாய்?
அடித்தாரைச் சொல்லிஅழு.
கொம்புக் கனியே
கோதுபடா மாங்கனியே
வம்புக் கழுதாயோ
வாயெல்லாம் பால்வடிய ?

"கண்ணே, நான் ஊட்டிய பாலை நீ உட் கொள்ளாமல் அழுகிருயே. வாயிலிருந்து பால் வழிய வழிய அழுகிருயே! அழுவதற் குத் தகுந்த காரணம் ஏதேனும் உண்டா ? அல்லது, வம்புக்காக அழுகிருயா?

"ஒருவேளை, உன்னை யாராவது அடித்து விட்டார்களோ? அப்படியானல் அடித்தவர்கள் யார்? எதனுல் அடித்தார்கள்?" என்று தாய் கேட்கிருள்.

மாமன் அடித்தானே
மல்லிகைப் பூச் செண்டாலே?
அத்தை அடித்தாளோ
அல்லிமலர்ச் செண்டாலே?
பாட்டி அடித்தாளோ
பால் ஊற்றும் கையாலே?
அண்ணன் அடித்தானே
அழுகிறதைப் பார்ப்பதற்கு?

மற்றவர்கள் அடித்ததற்கெல்லாம் காரணம் கூருத தாய், அண்ணன் அடித்ததற்கு மட்டும் காரணம் கூறுகிருள். தம்பி அழும் அழகைப் பார்ப்பதற்காகத்தான் அண்ணன் அடித்திருப்பானும்! சிறு குழந்தைகளை அழவைத்து வேடிக்கை பார்ப்பதும் சில பெரிய குழந்தைகளுக்கு இயல்புதானே!

எதற்காக அடித்திருந்தால் என்ன? அவர்களைச் சும்மா விடக்கூடாது. சரியான தண்டனை கொடுப்போம் என்று குழந்தையைச் சாந்தப்படுத்துவதுபோல் கூறுகிருள் தாய்.

அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள் பண்ணிவைப்போம்.
தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டுவைப்போம்.

யாரும் அடித்திருந்தால்தானே தண்டனை கொடுக்க வேண்டும்? ஆனாலும், தொடர்ந்து அழுவதன் காரணமென்ன? அதைக் கண்டுபிடித்துவிட்டாள் தாய்!

ஆரும் அடிக்கவில்லை
ஐவிரலும் தீண்டவில்லை
தானாய் அழுகின்றான்
தாயார் மடிதேடி.

தூக்கம் வரவில்லை. தொட்டிலில் கிடப்பதைவிட அன்னை மடியில் கிடப்பதையே அச்சமயம் குழந்தை விரும்புகிறது என்பதை உணர்கிறாள் தாய். உடனே பாட்டு நிற்கிறது. மறுவிநாடியே தொட்டிலில் கிடந்த குழந்தை தாயின் மடிக்கு மாறுகிறது. அழுத முகம் சிரித்த முகமாகிறது!

குழந்தை தூங்கும் தொட்டிலின் சிறப்பைப் பற்றியும், கட்டிலின் சிறப்பைப் பற்றியும் தாலாட்டுப் பாடல்களில் கூறுவதுண்டு.

ஒரு தாய் தான் கட்டிய தொட்டிலை வர்ணிப்பதோடு, தொட்டிலில் தூங்கும் தன்

குழந்தையையும் வியப்போடும் பூரிப்போடும் வர்ணிக்கிருள்.

வெள்ளிவளை பூட்டி
விலாசமாய்த் தொட்டிகட்டி
தங்கவளை பூட்டி
சதுரஅலங்காய்த் தொட்டிகட்டி
தொட்டியிலே அட்டணக்கால்
தூங்குறது யார்மகனே?
சீதைமகனே? ஸ்ரீராமர் தந்தகண்ணே?
அல்லிமகனே? அரிராமர் மருமகனே?

இன்னெருு தாய், பச்சை இலுப்பைக் கிளையிலே தொட்டிகட்டித் தாலாட்டுகிருள்.

பச்சை இலுப்பைவெட்டி
பவளக்கால் தொட்டிலிட்டு
பவளக்கால் தொட்டிலிலே
பாலகனே நீயுறங்கு.

* * *

கட்டிப் பசும் பொன்னே - கண்ணே நீ
சித்திரப் பூந்தொட்டிலிலே
சிரியம்மா சிரிச்சிடு - கண்ணே நீ
சித்திரப் பூந்தொட்டிலிலே.

கட்டிலுக்குக் கீழேயும், தொட்டிலுக்குக் கீழேயும், குழந்தைகளுக்குக் காவலாகவும்,

துணையாகவும் சாமி இருப்பதாகப் பாடுவதையும் கேட்கலாம்.

காசியிலே பட்டெடுத்துக்
கப்பலிலே தொட்டிகட்டி
தொட்டி வரிந்துகட்டி
துரைமகனைப் போட்டாட்டி

தொட்டிலுக்கும் கீழே
துணையிருப்பாள் மீனாட்சி.
கட்டிலுக்கும் கீழே
காத்திருப்பார் சொக்கலிங்கம்.

இப்படித் தெய்வங்களைக் குறிப்பிடும் போது, தங்களுடைய குலதெய்வங்களுக்கு ஏற்றபடி தெய்வங்களின் பெயர்களை அமைத்துப் பாடுவது பெண்களின் இயல்பு.

தாலாட்டுப் பாடல்களிலே பல கதைப் பாடல்களும் உண்டு. ஆற்றின் கதை, வீடு கட்டின கதை போன்ற பாடல்களுடன் தெய்வபக்தி ஊட்டும் சீதை கதை, வள்ளி கதை, சொக்கர் கதை முதலிய கதைப் பாடல்களும் பாடப்படுகின்றன. 'வள்ளி கதை'ப் பாடலிலே வரும் 'நாரதர்-வள்ளி உரையாடல்' மாதிரிக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"வாருமையா நாரதரே
வந்ததென்ன சேதி" என்றாள்.

"“எங்கிருந்து எங்கு
வந்தீர்?
எனக்கறியக் கூறும்”
என்றாள்.

" பூலோகம்
சென்று - வள்ளி
பூத்த மலரெடுத்துத்
தனிலோகம்
சென்று - வள்ளி
தனித்த மல
ரெடுத்துக்
கந்தனுக்கு
வள்ளியை - நான்
கல்யாணம் செய்ய
வந்தேன்.
வேலவர்க்கு
வள்ளியை - நான்
விவாகம் முடிக்க
வந்தேன்”

என்று சொல்லக்
கேட்டு,
எடுத்துரைத்தாள்
வள்ளியவள்.

"இல்லாத வார்த்தைகளை
எடுத்துரைத்தீர் நாரதரே,
அண்ணன்மார் ஏழ்பேரும்
பொல்லாத கோபமுள்ளார்
கண்தப்பிப் போவதென்ருல்
காற்ருய்ப் பறந்துவிடும்

உயிர்தப்பிப் போவதென்ருல்
ஓடிவிடும் நாரதரே.''

என்று சொல்லக் கேட்டு
எடுத்துரைப்பார் நாரதரும்
''கந்தனுக்கு வள்ளியை - நான்
கல்யாணம் செய்யாவிட்டால்
வேலவர்க்கு வள்ளியை - நான்
விவாகம் முடிக்காவிட்டால்
நாரதரும் இல்லை'' என்று
நல்ல சபதமிட்டார்.
பூணூலைக் காட்டிப்
பெரிய சபதமிட்டார்.

நாரதர் சபதம் நிறைவேறுகிறது. வள்ளிக்குக் கந்தன் மாலையிடுகிருன். மணம் மங்களமாக முடிகிறது.

கீழ்ச்சாதி என்னுமல்
கிளிமொழியை மாலையிட்டார்.
குறச்சாதி என்னுமல்
கொம்பனையை மாலையிட்டார்.
மறுசாதி என்னுமல்
வள்ளிதனை மாலையிட்டார்.

இதேபோல், இராமருடன் வனவாசம் செய்தசீதையை, இராவணன் தூக்கிச் சென்ற

தையும், பிறகு, இராமர் மீட்டு வந்ததையும் கூறுகின்றது கீழ்க்காணும் பாடல் •

மண்ணிலொரு புன்னைமரம்
வருந்தியொரு காய்காய்க்கும்
ஜானகையாள் புன்னைமரம்
தழைநெருங்கிக் காய்காய்க்கும்
பூநாலு, காய்மூணு
புனக்கிளியாள் புன்னைமரம்
தாயார் சொற்படிக்கு
ராமர் வழிநடந்தார்.

பர்ணக சாலைகட்டி - சுவாமி
பகவானும் பள்ளிகொண்டார்
வடிவுள்ள மான்வந்து
மருகி விளையாடையிலே
வகையறியாச் சீதையரும், சாமி,
மான்எனக்கு வேணுமென்ருள்.
மானைப் பிடிக்க
வனம் புகுந்தார் ஈஸ்வரரும்.

பிச்சையென்ருன் ராவணனும்.
அள்ளியிட்டாள், ஜானகிதான்.
கூசாமே சீதையரைக்
கொண்டுவந்தான் தென்னிலங்கை.

ராமர்
வைத்தஇடம் காணுமல்,
வாடி அலைந்தாராம்.

தேடித் திரிந்தாராம்
திருக்கால் சிலம்பதிர.
ஓடித் திரிந்தாராம் - ராமர்
ஒருகால் சிலம்பதிர.

ஆழி கைக்கொடுத்து
அனுமாரைத் தூதனுப்பி
சீராழி கைக்கொடுத்து - ராமர்
சீதை சிறை மீட்டாராம்.
கணையாழி கைக்கொடுத்து - ராமர்
காரிகையை மீட்டாராம்.

3. தாலாட்டுப் பாட்டிலே தாயின் கதை

செல்வக் குடும்பத்திலே பிறந்தாள் ஒரு பெண். அவளுக்குத் திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. தான தருமங்களெல்லாம் செய்தாள். அவளும் அவளுடைய கணவரும் புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் சென்றார்கள். ஆண்டவனை வேண்டினார்கள். ஆனாலும், பலனில்லை.

கடைசியில், காட்டிலே ஒரு முனிவரைக் கண்டார்கள். அவர் கொடுத்த மாங்கனியை அவள் தின்றாள். பலன் கிடைத்தது. அவளுக்குப் பெண் குழந்தை பிறந்தது. தவம் செய்து பெற்ற குழந்தையை அந்தத் தாய் அன்போடு தாலாட்டுகிறாள். தாலாட்டுப் பாடலில், அவள் தன் கதையையே சொல்லுகிறாள்.

அவளுடைய தாய்க்கு அவள் ஒரே மகளாகப் பிறந்தாளாம். அதனால், பெண் குழந்தையானாலும், பொன்னைப் போலக் கண்ணும்

கருத்துமாக அவளை வளர்த்தார்களாம். இதைக் கூறும்போதே அவளுடைய தகப்பனுருடைய ஊர் எது, தாயார் பிறந்த ஊர் எது என்பதையும் அவள் கூறுகிருள்.

ஒருத்திக் கொரு மகள் பிறந்தேன்
- கண்ணேநான்
ஒண்டியிலே உலகம் வந்தேன்.

தகப்பன் வந்து தாராபுரம்
- கண்ணேஎன்
தாய் வந்து தர்மபுரி.

அண்ணன் இல்லை தம்பி இல்லை
- கண்ணேஎனக்கு
அக்காள் இல்லை; தங்கை இல்லை.

பொன்னுண்ணுலும் பொன்னுப் போலே
- கண்ணேஎன்னைப்
பொத்திப் பொத்தி வளர்த்தாங்களே!

பால் குடிக்கும் பாப்பாவாக அவள் இருந்தபோது அவளுடைய தாயாருக்குக் குளிர்காய்ச்சல் வந்ததாம். அதனுல், பால் வற்றிப்போய்விட்டதாம். உடனே, பால் கொடுக்க, ஒரு காராம் பசுவையே விலைக்கு வாங்கிவிட்டார்களாம்.

காய்ச்சல் குளிர் ஆட்டப் போய்க்
- கண்ணேஎன்
தாய்க்குப் பால் வற்றப் போய்த்

தாராளமாய்ப் பால்
கொடுக்கக்-கண்ணே
எனக்குக் காராம்பசு
வாங்கினாளாம்.

குழந்தையாக இருந்த போது அவளைப் பாது காத்து வளர்ப்பதற்குப் பல தாதிகள் இருந்தார்களாம். ஒவ்வொரு தாதிக்கும் வெவ்வேறு வேலை. ஒரு தாதி குழந்தைக்கு மருந்து அரைப்பாளாம். ஆனால், அவளே மருந்து போட மாட்டாளாம். அதற்கு வேறொரு தாதி வருவாளாம்! அதே போல், ஊஞ்சல் கட்டுவதற்கு ஒரு தாதியாம். ஊஞ்சலை ஆட்டுவதற்கு இன்னொரு தாதியாம்!

மருந்தரைக்கத் தாதி
வேறே - கண்மணியே
மருந்து போடத்
தாதி வேறே

ஊஞ்சல் கட்டத் தாதி
வேறே - கண்மணியே
ஊஞ்சல் ஆட்டத்
தாதி வேறே.

தாய் வீடு பணக்கார வீடல்லவா? ஆகையால் பளிங்குத் தரையில் குழந்தை வழுக்கி விழுந்து விடாமல் பாதுகாக்க வேண்டுமே! அதற்காக ஒரு தாதியாம்.

பளிங்கிலே வழுக்கிடாமே
- கண்மணியே
பாதுகாக்கத் தாதி
வேறே.

இன்னும்,

சின்னச்சின்னப் பிள்ளை கூட - கண்மணியே
சேர்ந்துநான் விளையாடையிலே
சீக்குப் பிணி அண்டிடாமே - கண்மணியே
சேதம் ஒண்ணும் ஆகிடாமே
ஈயெறும்பு கடிச்சுடாமே - கண்மணியே
எல்லாம் பார்க்கத் தாதி வேறே.

சில சமயங்களில் ஒரே வேலையை இரண்டு தாதிகள், மூன்று தாதிகள், ஏன்,

நான்கு தாதிகள்கூடச் செய்வார்களாம்! எப்படி?

பொட்டுவைக்க ரெண்டு தாதி - கண்மணியே
சட்டை போட மூணு தாதி
தாங்கித் தாங்கித் தூங்க வைக்க -
கண்மணியே
தாராட்டத் தாதி நாலு.
பாலூட்டத் தாதி நாலு - கண்மணியே
பசு மேய்க்கத் தாதி நாலு
ராவெல்லாம் கண்விழித்து - கண்மணியே
காவல் காக்கத் தாதி நாலு.

இப்படிச் செல்வமாக வளர்ந்தவளை ஐந்து வயதிலே பள்ளிக்கூடத்திலே சேர்த்தார்கள். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அந்தக் காலத்தில் 'அரிசித்தரி' என்றுதான் ஆரம்பத்திலே சொல்லிக்கொடுப்பார்கள். பத்து வயதிற்குள் அவள் படிப்பையெல்லாம் முடித்துவிட்டாள். பன்னிரண்டு வயதிலே பருவமானுள். பிறகு திருமணமாயிற்று. திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லை.

அஞ்சு வயசிலே நான் - கண்மணியே
அரிசித்தரி படிச்சேனம்மா.

பத்து வயசுக்குள்ளே நான் - கண்மணியே
படிப்பெல்லாம் முடிச்சேனம்மா.
பன்னிரண்டு வயசிலே நான் - கண்மணியே
பருவமான காலத்திலே
வாலிபப் பிராயத்திலே - கண்மணியே
வாழ்க்கைப் பட்டேன் உங்கப்பாவுக்கு.
வருசம்பத் திருவதுமாச்சு - கண்மணியே
வாசனைக்கும் பிள்ளையில்லை.

குழந்தையில்லாக் குறைதீர அவள் நெய் விளக்கேற்றி வைத்தாள். பலவித நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினுள். அவளும் அவளுடைய கணவரும் தீர்த்த யாத்திரை போனுர்கள். எங்கெங்கே போனுர்களாம்?

காசி தீர்த்தம் செய்து பார்த்தேன் -
கண்மணியே
குற்ருலத்தில் குளித்துப் பார்த்தேன்
ராமேச்வரம் போய்ப் பார்த்தேன் -
கண்மணியே
பாவ நாசமும் போய்ப்பார்த்தேன்.
பழனிமலை மேலிருக்கும் - கண்மணியே
பழனியாண்டவனையும் பார்த்தேன்.

இவ்வளவு செய்தும் குழந்தை பிறக்காததால் அவளுடைய ஏக்கம் அதிகமாகியது. வீட்டிலே ஒரு குழந்தை இருந்தால் அது

சும்மா இருக்குமா? துறுதுறுவென்று ஏதாவது செய்துகொண்டேயிருக்கும். என்ன என்ன செய்யும் என்பதை அவள் அடிக்கடி கற்பனை செய்து பார்ப்பாளாம். அப்போது அவளுடைய ஏக்கம் மேலும் அதிகரிக்குமாம். அந்த ஏக்கத்தை அவள் எவ்வளவு அழகாக வெளியிடுகிருள்!

மெழுகி வைத்த வீட்டுக்குள்ளே -
கண்மணியே
விளையாடப் பிள்ளையில்லை.
கூட்டி வைத்த வீட்டுக்குள்ளே-கண்மணியே
குப்பை போடப் பிள்ளையில்லை.
நிறைத்து வைத்த நிறைகுடத்தைக் -
கண்மணியே
குறைத்து வைக்கப் பிள்ளையில்லை.
ஆக்கிவைத்த அண்டாச் சோற்றைக் -
கண்மணியே
அள்ளித் தின்னப் பிள்ளை இல்லை.

பிள்ளைக் கலி தீர அவள் பலவித தானதருமங்களைச் செய்தாள். கன்று குடிக்கத் தண்ணீர்த்தொட்டி கட்டி வைத்தாள். மாடு தின்ன வைக்கோல் போட்டாள். ஆனாலும்,' அவை அவளுடைய தருமத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு அவள் கூறும் காரணம் என்ன?

கன்று போற வழியிலே நான் - கண்மணியே
கல்கிணறு கட்டிவைத்தேன்.

மலடி கைத்தருமமென்று - கண்மணியே
மாடு தண்ணி குடிக்கலையே!

மாடு போற வழிமேலே நான் - கண்மணியே
மணிபோல வைக்கோல் போட்டு
வைத்தேன்.

மலடி கைத்தரும மென்று - கண்மணியே
மாடு வைக்கோல் தின்னலையே!

தான தருமம் செய்தும் பயனில்லை. ஊராரெல்லாம் அவளை 'மலடி' என்று கேவலமாகப் பேசவும் தொடங்கினார்கள். இதனால் அவளும் அவள் கணவரும் வெறுத்துப் போய் ஊர் ஊராகச் சுற்றினார்கள். காடு மலைகளிலெல்லாம் அலைந்தார்கள். அப்போது ஒரு ரிஷியைக் கண்டார்கள்.

காட்டு ரிஷி கண்மூடிக் - கண்மணியே
கடவுள்தவஞ் செய்கையிலே
கண்டோமம்மா தவமுனியைக் - கண்ணே
அவர்
காலிலேதான் விழுந்தோம் அம்மா
தவம் முடித்து ஜபம் முடித்துக் - கண்மணியே
தந்தாரம்மா மாங்கனியும்.

மந்திரமும் உச்சரித்துக் - கண்மணியே
மாங்கனியைத் தந்தாரம்மா.

வலம்புரியும் இடம்புரியும் - நாங்கள் சுற்றி
வந்தோமம்மா முனிவர் பக்கம்

திருநீறையும் பன்னீரையும் - எங்கள்மேலே
தெளித்தாரம்மா முனிவர்தானும்.

தலைமேலே கையைவச்சுக் - கண்மணியே
தந்தாரம்மா ஆசீர்வாதம்.

ரிஷியின் ஆசீர்வாதம் பெற்ற அவள் கருவுற்றாள். பெண் குழந்தை பிறந்தது. அப்போது அவள் அடைந்த மகிழ்ச்சியை அளவிட முடியுமா? 'இனி என்னை எவரும் மலடி என்று கூற முடியாது. நான் தாயாகி விட்டேன்' என்று அவள் பூரித்துப் போனாளாம். தொட்டியில் கிடக்கும் அக்குழந்தையிடம் அதை அவள் எவ்வளவு ஆனந்தத்தோடு கூறுகிறாள்!

நீபிறந்த நாள்முதலாக் - கண்ணேஎன்
நிந்தனையும் மாறிற்றம்மா.

மலடிபெற்ற மலட்டுவரம் - கண்மணியே
மங்கிற்றம்மா அன்றுமுதல்.

இது மட்டுமா? இத்தனை நாளாக மலடியாயிருந்தவளுக்கு, இப்படிப் பொன் போல

ஒரு பெண் பிறந்திருக்கிறதே என்று அக்கம் பக்கத்திலிருந்தவர்களெல்லாம் ஆச்சரியப் பட்டார்களாம்.

அண்டைவீடும் அடுத்த வீடும்-கண்மணியே
ஆச்சரியப் பட்டாரம்மா.
அப்பாவும் நானும் சேர்ந்து - கண்மணியே
ஆண்டவரைத் தொழுதோம் அம்மா.

(பாடல்—' மலையருவி ' நூலிலிருந்து.)

4. மகிழ்ச்சியூட்டும் மழலைப் பாடல்கள்

குழந்தையை மிக அன்போடு பாலூட்டிச் சீராட்டி வளர்க்கின்றாள், அதன் தாய். குழந்தையை வளர்ப்பதில் ஒவ்வொரு கட்டத்திலும் தாய்க்குத் துணையாக நிற்கிறது பாட்டு. ஆம், குழந்தையின் அழுகையை நிறுத்தி அமைதியாகத் தூங்க வைக்கத் தாலாட்டுப் பாடல் உதவுகிறது.

குழந்தை கையை வீசிக் களிப்போடு இருக்க வேண்டுமா?

கை வீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு.

என்று பாட ஆரம்பித்துவிடுகிறாள் தாய்.

குழந்தையை முன்னும் பின்னுமாக அசைந்தாடச் செய்ய வேண்டுமா ?

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சந்தன மயிலே சாய்ந்தாடு

குத்து விளக்கே சாய்ந்தாடு
கோயில் புருவே சாய்ந்தாடு

என்ற பாட்டு உதவிக்கு வருகிறது.

குழந்தை சாப்பிடாமல் அடம் பிடிக்கிறதா? இதோ அதற்கும் ஒரு பாட்டு:

கொக்குக்கு ஒருவாய்,
குருவிக்கு ஒருவாய்,
காக்கைக்கு ஒருவாய்,
என் கண்ணுக்கு ஒருவாய்.

என்று பாடிக்கொண்டே குழந்தையின் வாய்க்குள் தாய் சோற்றை அனுப்பிவிடுகிருள்.

பிறந்தது முதல் இப்படிப் பலவிதமான பாடல்களைக் கேட்டுக் கேட்டு அவற்றிலே மனத்தைப் பறிகொடுத்துவிடுகிறது, குழந்தை. பேசத் தெரிந்த பிறகு அக் குழந்தை சும்மா இருக்குமா? தனது மழலை மொழிகளால் பாடத் தொடங்கிவிடுகிறது.

அப்படிப் பாடும்போதுதான் அதற்கு எவ்வளவு இன்பம்! எவ்வளவு குதூகலம்!

குழந்தையின் உள்ளத்தை எளிதிலே கவரக்கூடியது நிலா. நிலாவைப் பற்றிப் பாடாத கவிஞனே இல்லை என்று சொல்லலாம். ஆயினும், நிலாவைப் பற்றி மழலை

மொழியிலே குழந்தை பாடும்போது எவ்வளவு இன்பமாக இருக்கிறது!



'நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா,
மலைமேலே ஏறிவா, மல்லிகைப்பூக்
கொண்டுவா.'

இப்பாட்டைப் பாடாத குழந்தையே இல்லை. நிலாவைக் காணும்போதெல்லாம் இந்தப் பாட்டைக் குழந்தைகள் பாடுகின்றனர்.

சந்திரன் அப்போதுதான் கிளம்பி வருகின்றான். மெல்ல மெல்ல மேலே எழுந்து வரும் அவனைக் காணுகின்ற குழந்தை, விரைவில் அவன் வரவேண்டும் என்று நினைக்கிறது. அதனால், 'ஓடிவா', 'சீக்கிரம் ஓடிவா' என்று அன்போடு — ஆசையோடு அழைக்கின்றது. மலையின் பின்னால் காணப்படும் சந்

திரன் அந்த மலையைக் கடந்து மேலே வர வேண்டும். அதைத்தான் 'மலைமேலே ஏறி வா' என்கிறது குழந்தை. 'மல்லிகைப் பூக் கொண்டுவா' என்றும் சொல்லுகிறதே, நிலா எப்படி மல்லிகைப்பூ கொண்டுவரும்? சுற்றிலும் வெள்ளை வெளேரென விளங்கும் நட்சத்திரங்களைத்தான் மல்லிகைப் பூவென்று வருணிக்கிறதுபோலும், அக்குழந்தை!

இப்படி வெள்ளை நிலாவைப் பாடிய குழந்தை கறுப்பு யானையைக் கண்டதும் சும்மா இருக்குமா? அதைப் பற்றியும் பாட ஆரம்பித்துவிடுகிறது.

> ஆனை ஆனை அழகர் யானை,
> அழகரும் சொக்கரும் ஏறும் யானை,
> கட்டிக் கரும்பை முறிக்கும் யானை,
> காவேரி நீரைக் கலக்கும் யானை,
> குட்டி யானைக்குக் கொம்பு முளைத்தது,
> பட்டணமெல்லாம் பறந்தோடிப்
> போச்சு!

குட்டி யானைக்குக் கொம்பு முளைக்கிற வரை எல்லோரும் அதைச் சுற்றி நின்று கொள்வார்கள்; வேடிக்கை பார்ப்பார்கள்; விளையாட்டுக் காட்டுவார்கள். கொம்பு முளைத்த பிறகு பக்கத்திலே நிற்க முடியுமா?

காலிலே சங்கிலி போட்டுக் கட்டி வைக்க வேண்டும். அல்லது, மாவுத்தன் அருகிலே அங்குசத்துடன் இருக்கவேண்டும். இரண்டும் இல்லாவிட்டால், யாரேனும் நெருங்கு வாரோ? பறந்தோடிப் போய்விடுவார்களே! அதைத்தான் 'குட்டி யானைக்குக் கொம்பு முளைத்தது, பட்டணமெல்லாம் பறந்தோடிப் போச்சு' என்று நீட்டிப் பாடுகிறது குழந்தை.

இன்னொரு நாடோடிப் பாடலைப் பாருங்கள். இரு சிறுவர்கள். இருவருக்கும் ஒரு நாள் சண்டை வந்துவிடுகிறது. உடனே ஒருவன், "டேய், இனிமேல் நீ என்னோடே பேசாதே" என்று விறைப்போடு சொல்லுகிறான்.

"பேசப்படாதா? சரி, அப்படியே ஆகட்டும்" என்கிறான் மற்றவன்.

"என்னடா இது! ஆகட்டுமாவது, போகட்டுமாவது!" என்கிறான் முதல்வன். அதற்கு மற்றவன், "ஆமாம்,

ஆகட்டும், போகட்டும்,
அவரைக்காய் காய்க்கட்டும்,
தம்பி பிறக்கட்டும்,
தம்பட்டங்காய் காய்க்கட்டும்,

அவனுக்கும் கல்யாணம் ஆகட்டும்,
உன்னைக் கூப்பிடுகிறேனு, பார்.''

என்கிருன்.

பாட்டைக் கேட்டதும் சண்டை ஆரம்பித்தவனின் கோபம் பறந்தோடிவிடுகிறது. சிரிப்பு வந்துவிடுகிறது. அவனும் சேர்ந்து, 'ஆகட்டும், போகட்டும், அவரைக்காய் காய்க்கட்டும்' என்று பாட ஆரம்பித்துவிடுகிருன்.

'எனக்குத் தம்பி பிறக்கட்டும். அவனுக்குக் ல்கயாணம் ஆகிற சமயம் உன்னைக் கூப்பிடுகிறேனு, பார்' என்று சொல்லும்போது, 'அடேயப்பா, அவனுக்குத் தம்பி பிறந்து, அந்தத் தம்பிக்குக் கல்யாணம் ஆகிறபோது கூட இந்தச் சண்டை நீடித்திருக்கும்போலிருக்கிறதே!' என்று நினைக்கத் தோன்றும் ஆனுல், குழந்தை உள்ளம் ஒரு நொடியிலே சண்டையை மறந்து ஒன்றுபடுவதற்கு அந்தப் பாடலே துணையாக நிற்கிறது.

இன்னொரு பாட்டு. வினுவும் விடையும் கலந்த பாட்டு. காக்கையைப் பார்த்துக் குழந்தை கேள்வி கேட்கிறது. அதற்குக் காக்கை பதில் சொல்லுமா? காக்கையின் பதிலையும் அந்தக் குழந்தையே சொல்லிக் கொள்கிறது. அல்லது, காக்கைக்குப் பதிலாக

இன்னொரு குழந்தை பதில் சொல்லுகிறது. பாட்டு மிகவும் தெரிந்த பாட்டுத்தான்.

“காக்கா, காக்கா,
எங்கே போறாய்?”
“இரை தேடப் போனேன்”
“இரை என்ன கிடைத்தது ?”
“வைக்கோல் கிடைத்தது.”
“வைக்கோலை என்ன செய்தாய்?”
“மாட்டுக்குப் போட்டேன்.”
“மாடு என்ன கொடுத்தது?”
“பால் கொடுத்தது.”
“பாலை என்ன செய்தாய்?”
“பாட்டியிடம் கொடுத்தேன்.”
“பாட்டி என்ன கொடுத்தாள் ?”
“கட்டி முத்தம் கொடுத்தாள்.”

தினமும் குழந்தையின் பார்வையில் படுகின்ற பறவை காக்கை. அதைப் பார்க்கும் போதெல்லாம் குழந்தை இந்தப் பாட்டைப் பாடத் தொடங்கிவிடுகின்றது. இதனால், காக்கையிடத்திலே குழந்தைக்கு ஓர் உறவு ஏற்பட்டுவிடுகிறது.

‘காக்கை குருவி எங்கள் சாதி’ என்ற பாரதியின் பரந்த மனப்பான்மை குழந்தைக்கும் ஏற்படுகிறது.

இதே போல் ‘அம்புலி, அம்புலி’ எங்கே போறே?’ என்று ஒரு கேள்வி-பதில் பாடல்

உண்டு. அதில் ஒரு தனிச் சுவையைக் காண லாம்.

அம்புலி அம்புலி
எங்கே போறே?
மலையான் குளத்துக்கு
மண்ணெடுக்கப் போறேன்.

மண் என்னத்துக்கு?
செப்புப் பண்ண.
செப்பு என்னத்துக்கு?
பணம் போட.

பணம் என்னத்துக்கு?
மாடு வாங்க.
மாடு என்னத்துக்கு?
சாணம் போட.

சாணம் என்னத்துக்கு?
வீடு மெழுக.
வீடு என்னத்துக்கு?
பிள்ளை பெற.

பிள்ளை என்னத்துக்கு?

'பிள்ளை என்னத்துக்கு?' என்று கேட்டதும், அதற்கும் ஒரு வரியில் பதில் கூறலாமல்லவா? அப்படிக் கூறவில்லை. பத்து வரிகளில் பதில் வருகிறது. விளக்கமாகவும் உற்சாகமாகவும் கூறப்படும் அப்பதில் கேட்கக் கேட்க இனிமையாயிருக்கிறது.

பிரப்பம் பாயிலே
பிரண்டு விளையாட.
ஈச்சம் பாயிலே
இருந்து விளையாட.
தாழம் பாயிலே
தவழ்ந்து விளையாட.
ஓலைப் பாயிலே
ஓடி விளையாட.
கோரைப் பாயிலே
குதிச்சு விளையாட.
எண்ணெய்க் குடத்திலே
துள்ளி விளையாட.

நிலவைப் பற்றியும், யானையைப் பற்றியும், காக்கையைப் பற்றியும் பாடுகின்ற குழந்தை, நாலைந்து தோழர்களுடன் சேர்ந்து விளையாடும்போதும் சும்மா விளையாடுவதில்லை. பாட்டுப் பாடிக்கொண்டேதான் விளையாடுகிறது.

ஐந்தாறு குழந்தைகளை வட்டமாக உட்கார வைத்து ஒரு குழந்தை துணிப் பந்தத்துடன் சுற்றிச் சுற்றி ஓடிவரும். ஓடிவரும் போது,

திரித்திரிப் பந்தம், திருநாள் பந்தம்,
திரும்பிப் பார்த்தால் ஒரு குட்டு,
ஒரு குட்டு, ஒரு தட்டு!

என்று மூச்சுப் பிடித்துப் பாடிக்கொண்டேயிருக்கும்.

குழந்தைகளால் சத்தம் போடாமல் விளையாடவே முடியாது. அப்படி விளையாடினாலும், அதில் அவர்களுக்கு மகிழ்ச்சி இருப்பதே இல்லை. வெறும் கூச்சல் போடுவதைவிட, இசையோடும் தாளத்தோடும் கூடிய பாட்டைப் பாடுவது நன்றாகத்தானே இருக்கும்? ஒரு குழந்தை ஆனந்தமாகப் பாடும்போது, மற்றக் குழந்தைகளும் அந்த ஆனந்தத்தில் பங்கு கொள்கின்றன. ஆட்டத்திற்கே அந்தப் பாட்டு உயிர் கொடுக்கிறது. சோர்வு பறந்துவிடுகிறது. உற்சாகம் பொங்குகிறது.

பெண் குழந்தைகள் கண்ணூமூச்சி விளையாடும்போது, 'கண்ணூங் கண்ணூமூச்சி, கடகட தோழி' என்று தொடங்கும் பாடலைப் பாடுகிறார்கள்.

அதேபோல் ஆண்குழந்தைகள் சடுகுடு விளையாடும் போது பலவிதமான பாடல்களைப் பாடுவார்கள்.

கொத்துக் கொத்து ஈச்சங்காய்
கோடாலி ஈச்சங்காய்
மதுரைக்குப் போனாலும்
வாடாத ஈச்சங்காய்
ஈச்சங்காய் ஈச்சங்காய்.

* * *

நான்தான் வீரன்
நல்லமுத்து பேரன்



வெள்ளிப் பிரம்பு எடுத்து
விளையாட வாரேண்டா
தங்கப் பிரம்பு எடுத்து
தாலிகட்ட வாரேண்டா, வாரேண்டா.

* * *

கருணைக் கிழங்கடா
வாழைப் பழமடா
தோலை உரியடா
தொண்டைக்குள் அடையடா
அடையடா அடையடா
அடையடா அடையடா.

இந்தப் பாடல்களில் ஓசைதான் இருக்கும். அர்த்தம் இராது. சடுகுடு விளையாட்டில் மூச்சுப் பிடித்துப் பாடுவதற்காக, பாட்டின் கடைசியில் சொன்ன சொல்லையே திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள்.

பெண்குழந்தைகளெல்லாம் சேர்ந்து கல்யாணப் பாட்டு ஒன்று பாடுவார்கள். யாருக்குக் கல்யாணம்? காக்காய்க் குஞ்சுக்கு!

காக்காய்க் குஞ்சுக்குக் கல்யாணம்
காவடி ஆட்டம் தேரோட்டம்
நாலு கரண்டி நல்லெண்ணெய்
நாற்பத்தெட்டுத் தீபாவளி
வாரூர் போரூர் சுப்பையர்
வழியை விலக்கடி மீனாட்சி.

இந்தப் பாட்டை எல்லோரும் சேர்ந்து ஒரே குரலில் பாடும்போது கணீர் என்று இருக்கும். எல்லையில்லாத இன்பம் ஏற்படும். ஐக்கிய உணர்ச்சியும் பொங்கித் ததும்பும்.

இத்தகைய பாடல்கள் வெறும் தாளத்தோடும் ராகத்தோடும் மட்டும் நின்றுவிடவில்லை. பொது அறிவை வளர்க்கும் பாடல்கள், அன்றாட வாழ்க்கைக்கு உதவும் விஷயங்களைப் போதிக்கும் பாடல்கள் முதலியவற்றையும் நாம் அடிக்கடி கேட்கிறோம். சமையலைப் பற்றிக் குழந்தைகள் பாடும் ஒரு பாட்டைக் கேளுங்கள் :

அரிசியைக் குத்து முன்னே.
அரித்துக் கழுவு பின்னே.
உலையில் அரிசி போடு.
உடனே மேலே மூடு.
கொதித்து வந்தபின் வடித்துக்
கொட்டி ஆற்றி எடுத்துக்
கத்திரிக் காயை அரிந்து
காரம் புளிப்புத் தெரிந்து
உப்பும் மசாலும் போட்டு
ஒத்தி ருக்கக் கூட்டு.
வெந்த பின்னே தாளித்து
விரித்து இலையில் படைத்து
யாவரும் கூடிப் புசிப்போம்;
இன்பமாக வசிப்போம்.

இந்தப் பாட்டில் சமையல் செய்யும் முறை சொல்லப்பட்டிருக்கிறது. மிகத் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா ?

வெள்ளைக்காரர்கள் நம் நாட்டுக்கு வந்த பிறகு, தமிழில் பலர் ஆங்கிலச் சொற்களையும் கலந்து பேசத் தொடங்கினர். பேச்சு வழக்கில் கலந்திருந்த ஆங்கிலச் சொற்கள் பாடல்களிலும் புகுந்துவிட்டன. அத்தகைய ஒன்றுதான் இதோ இங்கிருக்கும் குழந்தைப் பாடல் :

கடலோரம் கப்பல் பாரு
கப்பல் மேலே போட்டைப் பாரு
போட்டு மேலே ரோட்டைப் பாரு
ரோட்டு மேலே ஆயா பாரு
ஆயா கையிலே தட்டைப் பாரு
தட்டு மேலே லட்டைப் பாரு
லட்டு மேலே ஈயைப் பாரு
ஈ ஓட்டற கையைப் பாரு.

5

சிரிக்கவைக்கும் சிறுவர் பாடல்கள்

சிறுவர் எப்போதும் மலர்ந்த முகத்தோடும், மகிழ்ச்சியோடும் இருப்பதையே பெற்றோர்கள் விரும்புவார்கள். மற்றப் பெரியவர்களும் விரும்புவார்கள். பாட்டுப் பாடுவதென்றாலே சிறுவர்களுக்கு மகிழ்ச்சிதான். அதிலும் வேடிக்கைப் பாடல்கள் என்றால் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா ? சிறுவர்களின் ஆனந்தத்தை அதிகப்படுத்தப் பலர் பல பாடல்களைப் பாடி வைத்திருக்கிறார்கள். அந்தப் பாடல்களைச் சிறுவர்கள் பாடும்போது அவர்களுக்கு மட்டுமல்ல; அருகிலிருந்து கேட்பவர்களுக்கும் அளவில்லாத ஆனந்தம் ஏற்படுகிறது.

இத்தகைய பாடல்களில் வினா-விடைப் பாடல்கள் பல உண்டு. ஒரு சிறுவனைப் பார்த்து, "உன் ஊர் என்ன? பெயர் என்ன? ஜாதி என்ன?" என்று கேட்கிறார் ஒருவர்.

அதற்கு அச்சிறுவன் கூறும் பதில் வேடிக்கையாக இருக்கிறது.

'உன் பேர் என்ன?'
'பேரிக்காய்'
'உன் ஊர் என்ன?'
'ஊறுகாய்'
'உன் ஜாதி என்ன?'
'ஜாதிக்காய்'

சிறுமிகள் பாடுகின்ற ஒருபாட்டு உண்டு. அதில் ஒரு சிறுமி,

அத்தான் வந்தாரே
என்ன சொன்னார்?

என்று மற்றொரு சிறுமியைக் கேட்கிறாள். உடனே அவள், அத்தானுக்குத் தான் என்னென்ன செய்தேன் என்பதையும், அவர் ஒவ்வொன்றிலும் குற்றங் கண்டுபிடித்துக் கோபித்துக்கொண்டு போய்விட்டார் என்பதையும் எடுத்துச் சொல்லுகிறாள். பெரியவர்களில் கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்படும் சண்டையைக் கிண்டல் செய்வதுபோல் இருக்கிறது இப்பாட்டு.

ஆற்றி லிருக்கிற
பாகற் காயை
அறுக்கச் சொன்னாரே.

அறுத்துக் கிறுத்துப்
பொரிச்சு வச்சேன்
பூச்சி என்றுரே.

எலையைப் போட்டுச்
சோறு படைச்சேன்
திப்பி என்றுரே.

அடையைத் தட்டிக்
கையிலே கொடுத்தேன்
வறட்டி என்றுரே.

பிள்ளையைப் பெற்றுக்
கையிலே கொடுத்தேன்
பொம்மை என்றுரே.

சிறுவருக்கான நகைச்சுவைப் பாடல்களில் பொருள் இல்லாத பாடல்கள் நிறைய இருக்கின்றன. பொருள் இல்லாது போனாலும் மீசை, தோசை என்று எதுகை, மோனைகளுடனும், ஓசை நயத்துடனும் பல பாடல்கள் இருக்கும். அத்தகைய பாடல்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

மலைமேலே குண்டு
மல்லிகைப்பூச் செண்டு
உங்கப்பன் வளர்க்கிற மீசை
உங்காத்தாள் சுட்ட தோசை.

* * *

எட்டும் எட்டும் பதினாறு
ராமசாமிக் கோனாரு
குளத்தில் தண்ணீர் குடிச்சாரு
குனிஞ்சு குனிஞ்சு பார்த்தாரு
நண்டைப் பிடிச்சாரு
நறுக்கின்னு கடிச்சாரு
வீட்டிற்கு வந்தாரு
வெட்கப் பட்டுச் செத்தாரு.

* * *

அம்மா சுட்ட பணியாரம்.
அப்பா கொண்டாந்த கெடியாரம்.
அம்மா போட்ட கோலம்.
அங்கிட்டுப் போனால் பாலம்.

* * *

வண்டி என்ன வண்டி ?
வடக்கே போற வண்டி.
வண்டி மாடு சண்டி
வண்டிக் காரன் நொண்டி.

மிளகு என்ன மிளகு ?
மலையாளத்து மிளகு
பாட்டி செத்தால் எளவு
பத்துப் பணம் செலவு.

தோசை என்ன தோசை ?
அரைத் துட்டுத் தோசை.
தின்னத் தின்ன ஆசை
துடைப்பக் கட்டைப் பூசை.

கோட்டை யாவது கோட்டை
தஞ்சா வூருக் கோட்டை
தண்ணீர்க் குடம் ஓட்டை
தானே வாடி வீட்டே.

* * *

மாமன் வீட்டுக் கல்யாணம்.
மனசுக் குகந்த பாயாசம்.
சேமியா விலேசெய்த
சிவப்புச் சர்க்கரை லட்டு
மாமியாள் கையிலே சுட்ட
மரிக்கின் மாவுப் புட்டு.

கல்யாணம் என்றதும் 'அத்தான் பாட்டு' நினைவுக்கு வருகிறது. ஆம், அத்தானைப் பார்த்துக் கேலி செய்வதே ஓர் அழகுதான். சில பெண்குழந்தைகளிடம் அத்தான்மார்கள் அகப்பட்டுக்கொண்டு படுகின்ற பாடு—அப்பப்பா—சொல்லி முடியாது!

அத்தான் அத்தான் வாங்க
ஆசனப் பலகையிலே இருங்க
குட்டக் குளத்துக்குப் போங்க
குளிச்சு முழுகி வாங்க.
காசு இருந்தால் தாங்க
தோசை சுட்டுத் தாரேன்
தின்னுப்பிட்டுப் போகையிலே
பொண்ணு கட்டித் தாரேன்.

இத்துடன் நிறுத்தினால் போதாதா? சில குறும்புக்கார மைத்துனிகள் அத்தானின் அழகை வேறு வர்ணிக்க ஆரம்பித்துவிடுவார்கள்!

அத்தான் அத்தான் வாங்க
ஆசனப் பலகையிலே
இருங்க
உங்கள் கண்ணோ
யானைக்கண்
உசந்த மூக்கோ
கிளி மூக்கு
பேசும் நாக்கோ பிண்ணாக்கு
பெருத்த வாயோ ஒரு கால்வாய்
நல்ல வயிறோ வண்ணான் சால்
நடக்கும் காலோ ஏணிக்கால்.



இப்படி வர்ணனை வளர்ந்துகொண்டே இருக்கும். பாவம், மாமனார் வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையால் மைத்துனியின் வர்ணனையைக் கேட்டு என்ன செய்ய முடியும்? சேர்ந்து சிரிக்க வேண்டியதுதான். 'ஒக்கச் சிரித்தால் வெட்கமில்லை' என்பது உலக வழக்கல்லவா?

அத்தானைக் கிண்டல் செய்து பாடும் குழந்தைகள், அண்ணியை (மதனி) மட்டும் விட்டு வைப்பார்

களா? மதனி ஒருத்தியின் அலங்காரத்தையும், நடையுடை பாவனைகளையும் ஒரு சிறுவன் வர்ணிப்பதாக ஒரு பாடல்.

புங்கங் குளத்து மதினி
கஞ்சி குடிப்பாளாம்
கண்ணாடி பாப்பாளாம்
ஆட்டுத்தலை போலே
கொண்டை முடிவாளாம்
ஆவரைப் பூப்போல
மஞ்சக் குளிப்பாளாம்
மச்சானைக் கண்டால்
மயங்கி நடப்பாளாம்
கொழுந்தனைக் கண்டால்
குலுங்கி நடப்பாளாம்.

அத்தானையும் மதனியையும் பற்றிப் பாடுவதுதான் வேடிக்கையா யிருக்குமென்பதில்லை. இன்னும் எத்தனையோ வேடிக்கைப் பாடல்கள் உண்டு. ஒரு சிறு பையன் பாடுவான்.

எட்டு நாளைக்கு முன்னாலே
செத்த பாம்பை - நான்
எட்ட இருந்து அடிச்சுடுவேன்
நாராயணா
வத்திக் கிடக்கிற ஏரியிலே
நாராயணா - நான்

வளைஞ்சு வளைஞ்சு நீச்சடிப்பேன்
நாராயணா

மூணு கோழிக்கு ஆறு காலு
நாராயணா - அதில்
முட்டையிடும் பெட்டைக் கோழி
நாராயணா.

பிறரைக் கேலி செய்து அதன் மூலம் மற்றவர்களை மகிழ்விப்பதைவிட, தங்களைத் தாங்களே கேலி செய்துகொண்டு பிறரை மகிழ்விப்பது பாராட்டத் தக்கதல்லவா? அந்த வகையில் அமைந்துள்ளன கீழே உள்ள இரண்டு பாடல்கள்.

கத்திரிக்காய் திருடப் போனேன்
கடைத் தெருவிலே - அந்தக்
கடைக்காரன் கண்டுக் கிட்டுப்
போட்டான் முதுகிலே.

* * *

ஆர்க்காட்டில் சண்டையானால் - சந்த மாமா
அடுப்பங்கரையில் ஒளிந்திருப்போம் -
சந்த மாமா
வேலூரிலே சண்டையானால் - சந்த மாமா
வேலிப்புறத்தில் ஒளிந்திருப்போம் -
சந்த மாமா

* * *

விளையாட்டுச் சம்பந்தமான சில வேடிக்கைப் பாடல்களும் உள்ளன. முதல் நாள் மும்முரமாகப் பலிஞ் சடுகுடு ஆடிய ஒருவனது பற்களில் இரண்டு உடைந்துபோய் விட்டன. அடுத்த நாள் அவன் வரும்போது எதிர்க்கட்சிக்காரன் அவனைக் கிண்டல் செய்து பாடுகிறுன்.

பலிஞ் சடுகுடு அடிப்பானேன்
பல்லு ரெண்டும் போவானேன்?
உங்கப் பனுக்கும் உங்காயிக்கும்
இரண்டு பணம் தண்டம்,
தண்டம், தண்டம்...

கூத்திலே கோமாளி பாடும் பாட்டு ஒன்று சிறுவர் உள்ளத்தைப் பெரிதும் கவரக் கூடியது. முள் முனையிலே அவன் மூன்று குளம் வெட்டினுனும். அப்படி வெட்டிய மூன்றிலே இரண்டு பாழ். மீதம் ஒன்று...? அதில் தண்ணீரே இல்லையாம் !

இதே போல் மூன்று மூன்ருகச் சொல்லி அந்த மூன்றுமே உபயோகமில்லாதவை என்பதை நயமாகவும் நகைச்சுவையோடும் கூறுகின்ற பாடலை அபிநயத்தோடு சிறுவர்கள் பாடுவதைப் பார்த்தும் கேட்டும் பெரியவர்கள் ஆனந்தம் அடைகிருர்கள்.

முள்ளு முனையிலே
மூணுகுளம் வெட்டினேன்
ரெண்டுகுளம் பாழு
ஒண்ணு தண்ணியே இல்லை

தண்ணியில்லாக் குளத்துக்கு
மண்ணுவெட்ட மூணுபேரு.
ரெண்டுபேரு மொண்டி
ஒத்தன் கையே இல்லே.

கையில்லாத குசவன்
செய்தது மூணுபானை.
ரெண்டு பானை பச்சை
ஒண்ணு வேகவே இல்லை!

வேகாத பானைக்குப்
போட்டரிசி மூணரிசி
ரெண்டரிசி நறுக்கு
ஒண்ணு வேகவே இல்லை!

வேகாத சோற்றுக்கு
விருந்துண்ண மூணுபேரு.
ரெண்டுபேரு பட்னி
ஒத்தன் உண்ணவே இல்லை!

உண்ணாத கொத்தன்
கட்டினது மூணுகோயில்.
ரெண்டு கோயில் பாழு
ஒண்ணு சாமியே இல்லை!

சாமியில்லாக் கோயிலுக்கு
ஆடவந்தார் மூணுபேரு.



ரெண்டுபேரு மொட்டை
ஒருத்திக்கு மயிரே
இல்லை !

ஆகாய விமானம் ஒரு கிராமத்தின் வழியாகப் பறந்து செல்லுகிறது. ஒரு சிறுமி தன் பாட்டியிடம் மேலே பறக்கும் ஆகாய விமானத்தைக் காட்டி, "உன்னுடைய பாட்டன், பூட்டன் நாளிலே இந்த மாதிரிப் பார்த்தது உண்டா?" என்று கேட்கிருள்.

ஏ ஏ ஏ பாட்டியா
ஏரோப்பிளேன் பார்த்தியா
பாட்டன் பூட்டன் நாளையிலே
பறவைக் கப்பல் பார்த்தியா ?

ஆங்கிலேயர் இட்ட 'ஏரோப்ளேன்' என்ற சொல்லுக்குப் 'பறவைக் கப்பல்' என்ற அழகு தமிழ்ச் சொல்லையும் அப்பாட்டிலே நாம் காணலாம்.

ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது போல இருக்கின்ற உண்மையை-எல்லோருக்கும் தெரிந்த சாதாரண விஷயத்தை எடுத்துச் சொல்லுகிறது, ஒரு

பாட்டு. கற்பனையோ, ஓசை நயமோ அதில் இல்லாத போனாலும் கேட்பதற்குச் சுவை யாக இருக்கும்.

நூறுவது இரண்டைம்பது.
நுங்காவது பனங்காய்.
கூறுவது பங்கிட்டது.
குண்டாவது பள்ளம்.

ஆறுவது, நாலாவது
ஆகத் தொகை பத்து.
ஆறேடியது கிழக்கே.
அதற்கப்பால் பெருங்கடலாம்.

சிறுவர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து விளையாடும்போது, ஒரு கட்சியினர் கால் வலிக்கிறது, மேல் வலிக்கிறது என்று பாசாங்கு செய்கின்றார்கள். மற்றொரு கட்சியினர் அவர் களைக் கேலி செய்து பாடுகிறார்கள்.

காலே வலிக் குதே.
கட்டிலைத் தூக்கிப் போட்டுக்கோ.
மேலே வலிக் குதே.
வெந்நியை வச்சு ஊத்திக்கோ.
ஊசி விழுந்திருச்சு.
உத்து உத்துப் பாத்துக்கோ.
பாசி விழுந்திருச்சு.
பாத்துப் பாத்து எடுத்துக்கோ.

வடிச்ச கஞ்சி கொட்டிப்போச்சு.
வாரி வாரிக் குடிச்சுக்கோ.

கட்டுச் சோறு நொந்துபோச்சு.
புட்டுப் புட்டுத் தின்னுக்கோ.

மழையில்லாமல் எங்கும் வரட்சி ஏற்படும் போது வருண பகவானை மக்கள் வேண்டிக் கொள்ளுகிறார்கள். யாகங்கள் நடத்து கிறார்கள், பூஜைகள் செய்கிறார்கள். ஆனால் குழந்தைகள் மழையை வரவழைக்கப் பாடும் பாடலிலே, என்னென்ன தருவதாகக் கூறு கிறார்கள், தெரியுமா ?

கொட்டைப் பாக்கு நறுக்கித்தாறேன்.
கோயில் மண்ணைத் தெள்ளித் தாறேன்.
ஜோர்மழை வா, ஜோர் மழைவா.

'பார், பார்' என்ற ஒரு பாடலைக் குழந்தை கள் வேடிக்கையாகப் பாடுவார்கள். இந்தப் பாடலில் ஒரு வரியின் கடைசியிலே வரும் பொருள், அடுத்த வரியின் ஆரம்பத்திலே வரும்.

கடலோரத்திலே கப்பல்பார்
கப்பலிலே ஆயாபார்
ஆயா கையிலே தட்டைப்பார்
தட்டுமேலே பிள்ளையைப்பார்
பிள்ளை கையிலே பழத்தைப்பார்
பழத்துக்குள்ளே பூச்சி பார்

பூச்சிக்குள்ளே கூண்டுபார்
கூண்டுக்குள்ளே கிளியைப்பார்
கிளி வாயிலே பழத்தைப் பார்
பழத்துக்குள்ளே பூச்சிபார்.

'வம்பை விலைக்கு வாங்குவது போல்' என்று ஒரு பழமொழி உண்டு. உதவி செய்யப் போய் உபத்திரவத்திற்குச் சிலர் உள்ளாகிறார் களல்லவா? அதே போல் குழந்தை உலகிலும் சில சமயம் நடப்பது உண்டு. அந்தச் சமயத்தில், பாடப்படும் பாடல் -

சும்மா இருக்கிற சிட்டுக்குருவிக்குச்
சோற்றைப் போடுவானேன்—அது
கொண்டையைக் கொண்டையை
ஆட்டிக்கொண்டு
கொத்த வருவானேன்?

பிள்ளைகளின் உள்ளத்தைக் கவருகின்ற உருவம் பிள்ளையாரின் உருவம். பிள்ளையார் என்றவுடனே குட்டையான உருவமும், தொந்தி வயிறும், ஆனை முகமும் குழந்தைகளின் மனக்கண் முன் தோன்றுகின்றன. அப்பொழுது அவர்கள் பாடுகின்ற பாட்டு மிக எளிமையாக மட்டுமல்ல; இனிமையாகவும் இருக்கிறது.

குள்ளக் குள்ளனே
குண்டு வயிறனே
வெள்ளைப் பிள்ளையாரே
விநாயக மூர்த்தியே.

6. உற்சாகமூட்டும் உழவர் பாடல்கள்

வயலில் வேலை செய்கின்ற ஆண்களும் பெண்களும் நாற்று நடும்போதும், களை பிடுங்கும்போதும், கதிர் அறுக்கும்போதும், களத்திலே போர் அடிக்கும் போதும், வைக்கோல் கட்டும்போதும் பலவகையான பாடல்களைப் பாடுகிறார்கள். உற்சாகமாக வேலை செய்ய அப்பாடல்கள் அவர்களுக்கு மிகவும் உதவுகின்றன. வேலையில்

அலுப்போ சலிப்போ அவர்களுக்கு ஏற்படு வது இல்லை.

நாற்றுப் பிடுங்கும்போது பெண்கள் பாட்டுப் பாடுகிறார்கள். இப்பாட்டில் ஒவ் வோர் அடியும் 'ஏலங்கிடி லேலோ' என்று முடி கிறது. பெண்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து கொண்டு இந்தப் பாடலைப் பாடுகிறார்கள். ஒரு கட்சியினர் பாட்டில் ஒரு வரியைப் பாடு வார்கள். மற்றொரு கட்சியினர் 'ஏலங்கிடி லேலோ' என்று குரல் கொடுப்பார்கள். இப் படி இரு கட்சியினரும் மாறி மாறிப் பாடும் போது, அவர்களின் உற்சாகம் அதிகரிக் கிறது.

நாற்றெல்லாம் பிடுங்கையிலே
- ஏலங்கிடி லேலோ
நண்டுஞ்சேர்த்துப் பிடிக்கறாங்க
- ஏலங்கிடி லேலோ

முடிஞ்சுவச்ச முடிச்சையெல்லாம்
- ஏலங்கிடி லேலோ
முழங்காலிலே மோதியடிப்பார்
- ஏலங்கிடி லேலோ

கட்டுச்சின்னக் கட்டுகளெல்லாம்
- ஏலங்கிடி லேலோ
கணுக்காலிலே அடிப்பாங்களாம்
- ஏலங்கிடி லேலோ

பிரித்துவைத்த கட்டைத்தானும்
- ஏலங்கிடி லேலோ
பிரியிலேதான் பெரிசாக்கட்டி
- ஏலங்கிடி லேலோ
பெரியகட்டைச் சரியாவைத்து
- ஏலங்கிடி லேலோ
பெருமையாய்த்தான் தலையில்வைத்து
- ஏலங்கிடி லேலோ
இடுப்பிலொரு கையும்வைத்து
- ஏலங்கிடி லேலோ
அடுத்தவயல் போறுங்கடி
- ஏலங்கிடி லேலோ.

நாற்றங்காலிலிருந்து பிடுங்கிய நாற்றை, வயல்களில் கொண்டு போய் நடும்போதும் 'ஏலங்கிடி லேலோ' பாட்டை அவர்கள் தொடர்ந்து பாடுவார்கள்.



ஆள் ஒண்ணுக்கு
ஆயிரம் நாற்று
- ஏலங்கிடி லேலோ
அழகாய்த்தானும்
நடுவோமையா
- ஏலங்கிடி லேலோ
காலமழைக் காலத்திலே
- ஏலங்கிடி லேலோ

கருத்தாய் நாற்று நடுவோமையா
- ஏலங்கிடி லேலோ
ஏலேலங்கிடிப் பாட்டுப்பாடி
- ஏலங்கிடி லேலோ
எடுப்போமையா கருத்தாநாற்றை
- ஏலங்கிடி லேலோ
தில்லாலங்கிடிப் பாட்டுப்பாடி
- ஏலங்கிடி லேலோ
திருப்பித்திருப்பி நடுவோமையா
- ஏலங்கிடி லேலோ.

நாற்று நடும்போது பெண்கள் பாடுகின்ற மற்ருெரு பாட்டையும் இங்கே காணலாம். இப்பாட்டின் ஒவ்வொரு வரியையும் ஒருத்தி முதலிலே பாடுவாள். மற்றவர்கள் அவள் பாடிய வரியை அப்படியே மீண்டும் பாடுவார்கள். நட்ட அலகுகள் நன்கு விளைய வேண்டும் என்று இந்திரனையும் சந்திரனையும் அவர்கள் இப்பாடலில் வேண்டுகிருர்கள்.

இந்திரனை நோக்கி
எடுத்தேன் திருஅலகு
சந்திரனை நோக்கிச்
சாத்தினேன் திருஅலகு
நிறுத்தின திருஅலகு
நின்று பயிர் ஏறவேணும்.
சாத்தின திருஅலகு
சாய்ந்துபயிர் ஏறவேணும்.

நெல்லா விளையவேணும்
நெடுங்களங்கள் ஏறவேணும்,
கதிரா விளையவேணும் - எங்களையா
களஞ்சியங்கள் ரொம்பவேணும்.

பயிர் நன்ருக வளர வேண்டுமாளுல், களைகளைப் பிடுங்கி எறிய வேண்டும். இல்லாவிடில், பயிர்களுக்காகப் போடும் உரத்தைக் களைகள் தின்றுவிடுமே! களையெடுக்கும் போது பாடுகின்ற ஒரு பாட்டில், நச்சுப் புல்லுடன், வேறு எந்தச் செடி இருந்தாலும் அறுத்தெறியும்படி பாடுகிருர்கள்.

ஆத்துக்குள்ளே ஏலே லோ
அத்திமரம் அகிலகிலா
அத்தி மரம்.

அளவு பாத்து ஐலப்பிடி
அறுக்கித் தள்ளு அகிலகிலா
அறுக்கித் தள்ளு

குளத்துக் குள்ளே ஏலேலோ
கொய்யா மரம் அகிலகிலா
கொத்தித் தள்ளு

சேத்துக் குள்ளே ஏலேலோ
செம்பகப் பூ அகிலகிலா
செம்பகப்பூ

செம்மையாக ஐலப்பிடி
சேத்தெடுக்க அகிலகிலா
சேத்தெடுக்க

நாத்துக் குள்ளே ஏலேலோ
நச்சுப் புல்லு அகிலகிலா
நச்சுப் புல்லு

நச்சுப் புல்லை ஐலப்பிடி
நறுக்கித் தள்ளு அகிலகிலா
நறுக்கித் தள்ளு.

கதிர்கள் முற்றியிருக்கின்றன. பெண்கள் கருக்கரிவாள் கொண்டு கதிர் அறுக்கிறார்கள். முற்றிய கதிர்களைத் திருடுவதற்கு வருகின்ற கள்ளர்களைப் பற்றியும், எலி, புரு, எறும்பு, பச்சைக் கிளி, வெட்டுக் கிளி முதலியவை பற்றியும் அப்பாட்டிலே பாடுகிறார்கள். இந்தப் பாட்டிலும், 'ஏலங்கிடி லேலோ' என்று ஒவ்வோர் அடிக்கும் பாடுவார்கள்.

சாமத்திலே சாமக்
கள்ளன்
- ஏலங்கிடி லேலோ
சாக்கைக்கொண்டு
வாறானம்மா
- ஏலங்கிடி லேலோ

பஞ்சாப் பறந்துட்டானும்
- ஏலங்கிடி லேலோ
பாவிப்பயல் மாயக்கள்ளன்
- ஏலங்கிடி லேலோ

மானங்கெட்ட மாயக்கள்ளன்
- ஏலங்கிடி லேலோ
மறைஞ்சுட்டானும் மத்யானத்திலே
- ஏலங்கிடி லேலோ

காட்டெலியும் வீட்டெலியும்
- ஏலங்கிடி லேலோ

கதிரைப் பொந்திலே
சேர்க்குதம்மா
- ஏலங்கிடி லேலோ

காட்டுப் புருவும்
வீட்டுப் புருவும்
- ஏலங்கிடி லேலோ

கதிரைநல்ல பதமாத்தின்னும்
- ஏலங்கிடி லேலோ
சிற்றெறும்பும் கட்டெறும்பும்
- ஏலங்கிடி லேலோ
புற்றில்சேர்க்கும் புதுநெல்லைத்தான்
- ஏலங்கிடி லேலோ
பச்சைக்கிளியும் வெட்டுக்கிளியும்
- ஏலங்கிடி லேலோ
பச்சைநெல்லைப் பதமாய்த்தின்னும்
- ஏலங்கிடி லேலோ

அறுத்த கதிர்களைப் பெரிய கட்டுகளாகக் கட்டுகிறார்கள். வயலிலிருந்து களத்துக்குக் கட்டுகளைத் தூக்கிச் செல்லவேண்டும். அவ் வழியாக வரும் கொத்தனார் ஒருவரைப் பார்த்து ஒரு பெண் பாடுகிறாள். போரடிப் பதற்குச் சாப்பாட்டுப் பாத்திரத்துடன் அவ ளுடைய மாமன் களத்துக்கு வருவார் என் பதையும் அவள் அந்தப் பாட்டிலே மகிழ்ச்சி யோடு குறிப்பிடுகிறாள்.

ஊரோரம் கதிரறுத்து
உரலுப்போல கட்டுக்கட்டி
தூக்கிவிடும் கொத்தனாரே
தூரகளம் போய்ச்சேர.

தும்பமலர் வேட்டிகட்டி
தூக்குப் போணி கையிலேந்தி

வாராக எங்க மாமா
வட்டம் உதறுதற்கே.

ஒரு பண்ணையிலே ஓர் உழவனும், அவன் மனைவியும் வேலை செய்கிறார்கள். அந்தப் பண்ணைக்காரர் மிகவும் நல்லவர். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்துதருபவர். வயலிலே அவர்கள் பாடுபட்டு வேலை செய்யும்போது நெல்லையோ அரிசியையோ அவர்களுக்குக் கூலியாக அளந்து கொடுத்தால் சமைப்பதற்கு நேரம் கிடைக்குமா? ஆகையால், சோருகவே அவர்களுக்குக் கொடுப்பாராம், அந்தப் பண்ணைக்காரர். அவருடைய பெருந்தன்மையை அந்த உழவனின் மனைவி மனங்குளிரப் பாடுகிருள்.

காசாப் படியளந்தால்
கனத்த நேரஞ் செல்லு மென்று,
நெல்லாப் ப'டியளந்தால்
நீண்ட நேரஞ் செல்லு மென்று,
அரிசியாப் படியளந்தால்
ஆக்க நேரஞ் செல்லு மென்று,
சோருப் படியளக்கும் - எங்களையா
சுவாமியார் பண்ணையிது.

இதற்கு நேர் எதிராக உள்ளது இன்னொரு பாடல். நிலத்தின் சொந்தக்காரர்

வண்டி மாடுகளையும், உழவனையும் எவ்வளவு கொடுமையாக நடத்துகிறார் என்பதை உழவன் வருத்தத்தோடு வெளியிடுகிறான்.

எருக்கலங் கட்டைவெட்டி
ஏழுவண்டிப் பாரமேத்தி
மாடு இழுக்கலேண்ணு
மாயுறாரே நம்மசாமி

ஒரு வண்டியிலே ஏழு வண்டிப் பாரத்தை ஏற்றிவிட்டு மாடு இழுக்கவில்லையே என்று எஜமானர் பிராணனை விடுகிறாராம்! 'மாட்டைப் போலவே என்னிடமும் நிறைய வேலை வாங்கிவிட்டு வயிற்றிலும் அடிக்கிறாரே முதலாளி' என்று மனம் வெதும்பும் உழவனின் வாயிலிருந்து வெளி வருகின்றது கீழ்க் கண்ட பாடல்.

முக்காப்படி கேப்பைக்காக
முந்திருந்து வாடுறேனே
ஐயா முதலாளி - நீங்க
அளக்கிறது பொட்டநாழி

கொடுப்பதோ முக்கால் படி. அதையும் சரியாக அளந்து கொடுக்கப்படாதா? குறைவாக அளக்கும் நாழியால் அளந்து கொடுக்கிறாராம். இதைத்தான் பொட்டநாழி (பொட்டை நாழி) என்று குறிப்பிடுகிறான்.

அறுவடையானதும், பொலிப்பாட்டு என்று ஒரு பாடல் பாடப்படும். விளையும் தானியங்களின் பொலிவு அதாவது அளவு அதிகமாக வேண்டும், உழவுக்கு உதவும் மாடுகள் நன்றாக வாழ வேண்டும் என்று அப் பாடலில் வேண்டிக்கொள்வார்கள். அதில் தேவலோகத்திலிருந்து பல வகையான நெல் வகைகள் வந்ததாகப் பாடுவார்கள்.

இன்பச் சம்பா
கம்பஞ் சம்பா
காடைக் குளத்தான்
கண்ணாடி பூத்தான்
ஈக்கி நட்டான்
இலங்கை யழிச்சான்
இஞ்சன் சம்பா
பெஞ்சன் சம்பா
ஈக்கி சம்பா
ஆவிரம் பூச்சம்பா
கட்டை வெள்ளை
குட்டை வெள்ளை

பயிர் விளைவதைப் பற்றியும் அந்தப் பாடலில் வருகிறது. ஒவ்வொரு திங்களிலும் (மாதத்திலும்) பயிர் எப்படி வளர்கிறது என் பதைக் கூறி ஆறுவது மாதம் அறுவடை ஆவதாகவும் கூறப்படுகிறது.

ஒண்ணும் திங்களில் ஒரு முளை விட்டு
இரண்டாம் திங்களில் இரு முளைவிட்டு
மூன்றும் திங்களில் மூன்று முளைவிட்டு
நாலாம் திங்களில் நாகபாக மாகி
அஞ்சாம் திங்களில் பஞ்சும் கதிருமாகி
ஆறும் திங்களில் அறுத்தே அடிக்க
பொலிக்கு ஐயாயிரக் கலமானது.

7. தோழனாய் உதவும் தொழிலாளர் பாடல்கள்

நாட்டுப் புறங்களில் இன்றும் பலர் பாட்டுப் பாடிக்கொண்டே தங்கள் தொழில்களைச் செய்கின்றனர். இதனால் அவர்களுக்கு உடல் சிரமம் தெரிவதில்லை; களைப்பு ஏற்படுவதுமில்லை. உற்ற தோழனாக நின்று உதவிவரும் நாடோடிப் பாடல்கள் கேட்பவர்களுக்கும் இன்பம் தருகின்றன.

பலவிதமான தொழில்களைச் செய்பவர்கள் அவரவர்களுக்கு ஏற்ற பாடல்களைப் பாடுகின்றனர். தொழிலாளர் பாடல்களிலே 'ஏற்றப் பாட்டு'க்கு முதல் இடம் கொடுக்கிறார்கள்.

ஆறுகள் இல்லாத இடங்களில் பெரிய கிணறுகளை வெட்டி, அவற்றிலிருந்து வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் நீர் பாய்ச்சுவர். ஏற்ற மரத்தின் மேல் ஒருவரோ அல்லது இருவரோ ஏறி நிற்பார்கள். மற்றொருவன் கீழே நிற்பான். அவன்தான் சால் பிடிப்பவன். அவன் ஒரு பாட்டைப் பாடுவான். மற்றவர்கள்



திரும்பப் பாடுவார்கள். வேடிக்கையாகப் பாடிக்கொண்டே அவர்கள் நீர் இறைப்பார்கள். ஏற்றப் பாட்டுப் பாடுகிறவர்கள் பிள்ளையாரைத் துணைக்கு அழைப்பார்கள்.

பிள்ளையாரே வாரும்
பிழைவராமல் காரும்

என்று தொடங்கி, பிள்ளையாரின் உருவத்தைப் பற்றியும், அவரின் உறவு முறைகளைப் பற்றியும் கூறுவார்கள்.

அஞ்சு கரத் தோனே
ஆனை முகத் தோனே
தும்பி முகத் தோனே
தொந்தி வயிற் ரோனே

பார்வதி குமாரா
பரம னுட பாலா
மாயன் மருகோனே
மங்கை உமை பாகா

இன்னொரு பாட்டிலே, பிள்ளையார் துணை செய்தால் என்னென்ன படைப்போம் என்று பாடுகிறார்கள்.

வாரும் பிள்ளையாரே, வழிக்குத் துணையாக.
வழிக் குத் துணையாக, எனக்குப் பயம்தீர.
மூத்த பிள்ளையாரே, முன் நடக்க வேணும்
முன்நடந்தாயானல், மூணுடைப்பேன்
தேங்காய்.

இளைய பிள்ளையாரே, எண்ணித் தரவேணும்.
எண்ணித் தந்தாயானால், என்னென்ன
படைப்பேன்?
பச்சரிசி தேங்காய், பயறு பலகாரம்
எள்ளுடன்துவரை, கொள்ளுடன் பயறு
அரிசி கலந்தது, ஆயிரம் கலமாம்
துவரை கலந்தது தொள்ளாயிரம் கலமாம்
எள்ளு கலந்தது, எண்ணூறு கலமாம்
மொச்சை கலந்தது, முன்னூறு கலமாம்
மூங்கில் கணுபோல, முன்னூறு கரும்பு
நாணல் தட்டைபோல, நானூறு கரும்பாம்.
அகத்திக் கம்புபோல, ஐநூறு கரும்பாம்.

பிள்ளையாருடன் மற்றத் தெய்வங்களையும் அவர்கள் வேண்டிக்கொள்ளுவார்கள். ஏற்றம் இறைப்பவர்களுக்குக் கால்வலி, கை வலி, மேல் வலியெல்லாம் அதிகமாயிருக்கும். அதனால் வலிகளெல்லாம் தீர வேண்டுமென்கிறார்கள்.

காளியாத்தா தாயே, கால்கள் வலியாமல்
மீனாட்சி அம்மா, மேலு வலியாமல்
கருப்பண்ண சாமி, கைகள் வலியாமல்
முத்து முனியாண்டி, உத்த துணை நீயே
ஏர்வாடி அல்லா, எனக்குத் துணை நீயே.

ஏற்றம் போட்டு நீர் இறைப்பதைப் போல கமலை கொண்டும் நீர் இறைப்பது உண்டு. இரண்டு மாடுகளைப் பூட்டி, முன்னும்

பின்னுமாக அவற்றை ஓட்டிக் கமலையில் நீரெடுத்துப் பாய்ச்சுவார்கள். இப்படிக் கமலை கட்டி நீர் பாய்ச்சத் தெரியாத மச்சானைப் பார்த்து ஒரு பெண் கேலியாகப் பாடுகிறாள்.

பொட்டலிலே வீடுகட்டி
பொழுதிருக்கத் தாலிகட்டி
கருத்தக்காளை ரெண்டும்கட்டி
கமலெறைக்கப் போகும்துரை.

பொட்டலிலே கிணறுவெட்டி
போர்க்காளை ரெண்டும்கெட்டி.
காப்புப்போட்ட கருத்தமச்சான்
கமலைகட்டத் தெரியலையே.

அடுத்தது ஓடக்காரன் பாட்டு. ஆற்றிலே ஓடம் செல்லுகிறது. அதிலே ஓடக்காரனும், அவன் காதலியும் ஆனந்தமாகப் பயணம் செல்லுகின்றனர். அப்போது, 'மண்ணை நம்பி' என்று அவன் பாட ஆரம்பிக்கிறான். உடனே அவள், 'ஏலேலோ' என்று பதிலுக்குப் பாடுகிறாள். 'மரம் இருக்க' என்று அவன் தொடர்ந்து பாடுகிறான். 'ஐலஸா' என்று அவள் குரல் கொடுக்கிறாள்.

இப்படியே அப்பாட்டை இருவரும் சேர்ந்து இன்பமாகப் பாடுகிறார்கள். ஒவ்வொன்றும் எதை நம்பியிருக்கிறது என்று

அவன் வரிசையாகப் பாடிவருகிருன். கடைசி யில் அவன் யாரை நம்பியிருக்கிருன் என் பதைக் கூறி முடிக்கிருன்.

மண்ணை நம்பி - ஏலேலோ
மரம் இருக்க - ஐலஸா
மரத்தை நம்பி - ஏலேலோ
கிளையிருக்க - ஐலஸா
கிளையை நம்பி - ஏலேலோ
கோலிருக்க - ஐலஸா
கோலை நம்பி - ஏலேலோ
இலையிருக்க - ஐலஸா
இலையை நம்பி - ஏலேலோ
பூவிருக்க - ஐலஸா
பூவை நம்பி - ஏலேலோ
பிஞ்சிருக்க - ஐலஸா



பிஞ்சை நம்பி - ஏலேலோ
காயிருக்க - ஐலஸா
காயை நம்பி - ஏலேலோ
பழமிருக்க - ஐலஸா
பழத்தை நம்பி - ஏலேலோ
நீயிருக்க - ஐலஸா
உன்னை நம்பி - ஏலேலோ
நானிருக்கேன் - ஐலஸா.

கல் தச்சர் ஒருவர் உச்சி மலையிலே வேலை செய்கின்றார். அவருக்கு எப்போது பசியெடுக்கிறதோ, அப்போது உளியை ஓங்கி அடித்தால், உடனே சாதம் கொண்டு வருவதாக அவர் மனைவி கூறுகிறாள்.

உச்சி மலையிலேயே
உளியடிக்கும் ஆசாரி
சத்தம்போட்டு உளியடிங்க
சாதம்கொண்டு நான்வருவேன்.

சுண்ணம் இடிக்கின்ற பெண்கள் உலக்கை குத்தும்போது தங்களுடைய துயரங்களையெல்லாம் பாட்டிலே வெளியிடுகிறார்கள். அவர்கள் உடல் நோவதையும், வயிறு காய்வதையும் அப்பாட்டிலே காணலாம்.

சிம்பிசிம்பி ஐயா எடுத்துலக்கை
சிற்றெலும்பை நோவுதையா.
மன்னிமன்னி எடுத்துலக்கை
மணிக்கட்டெல்லாம் நோவுதையா

கார்த்தாலே வந்தபெண்கள்
கானலிலே மாளுறோமே
விடியலிலே வந்தபெண்கள்
வெய்யிலிலே மாளுறோமே

வயிறுரொம்பப் பசிக்குதையா
வடித்தகஞ்சி பார்த்துவாரேன்
குலையைப்பசி தாவுதையா
கூழ்ப்பானை பார்த்துவாரேன்.

விறகு ஒடிக்கப் போகிறாள் ஒரு பெண. வேகாத வெய்யிலிலே அவள் போவதைக் கண்டு இரக்கப்பட்டு ஓர் ஆண் கேள்வி

கேட்கிறான். அதற்கு அவள் தக்க விடையளிக்கிறாள்.

ஆண்

வேகாத வெயிலுக்குள்ளே
- ஏதில்லலோ லேலோ

விறகொடிக்கப் போறபெண்ணே
- ஏதில்லலோ லேலோ

காலுனக்குப் பொசுக்கலையோ
- ஏதில்லலோ லேலோ

கற்ருழை முள்ளுக் குத்த லையோ
- ஏதில்லலோ லேலோ

பெண்

காலுப் பொசுக்கிஞலும்
- ஏதில்லலோ லேலோ
கற்ருழைமுள்ளுக் குத்தி ஞலும்
- ஏதில்லலோ லேலோ
காலக் கொடுமையாலே
- ஏதில்லலோ லேலோ
கஷ்டப்படக் காலமாச்சு
- ஏதில்லலோ லேலோ

இப்படியே அவன் பல கேள்விகளைக் கேட்க, அவள் பதில் சொல்லிக் கொண்டு வருகிருள். கடைசியில் பாட்டு கீழ்க் கண்டவாறு முடிகிறது.

ஆண்

கஷ்டப்பாடு பட்டுப்
பட்டு
- ஏதில்லலோ லேலோ
கழுத்தொடியச் சுமக்
கும் பெண்ணே
- ஏதில்லலோ லேலோ
எங்கேபோய் விற
கொடித்து
- ஏதில்லலோ லேலோ
என்னசெய்யப் போருய்
பெண்ணே
- ஏதில்லலோ
லேலோ

பெண்

காட்டுக்குள்ளே விற
கொடித்து
- ஏதில்லலோ சாமி
வீட்டுக்கதைச் சுமந்து
வந்து
- ஏதில்லலோ சாமி
கால்ருபாய்க்கு விறகு
விற்று
- ஏதில்லலோ சாமி
கஞ்சிகண்டு குடிக்
கணுமே
- ஏதில்லலோ சாமி

'ஏதில்லலேலோ லேலேலோ' என்று பாடி வந்த பெண், கடைசியில் 'ஏதில்லலோ சாமி' என்று அவருக்கு மரியாதை கொடுத்துப் பாடுகிருள். 'மரியாதை கொடுக்கிறேன். மரியாதையாகப் போய்விடு' என்று சொல்லாமல் சொல்லுகிருளோ !

பாரம் தூக்குகிறவர்கள், தங்கள் வேலையின் சிரமம் தெரியாமல் இருப்பதற்குப் பாடும் ஐலசா பாட்டு ஒன்று உண்டு.

அனந்த சயனு - ஐ ஏல்
ஆதி நாராயணு - ஐ ஏல்

என்று துவங்கித் திருமாலின் பெருமையையும், ஒவ்வோர் அவதாரத்திலும் அவர் செய்த அற்புதச் செயல்களையும் அழகாக விளக்கிப் பாடுவார்கள்.

இச்சையுடன் மாவலிபால் - ஐலசா
வாமன ஞகவந்து - ஐலசா
மூன்றடி மண் கேட்டுவாங்கி - ஐலசா
நீண்டபெரு வடிவமதை - ஐலசா
எடுத்தே உலகளந்தாய் - ஐலசா

வாமன அவதாரம் எடுத்து மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்ட இக் கதையைப் போலவே, திருமால் இராமனுக

வும், கண்ணனாகவும் வந்த கதைகளையெல்லாம் பாடுகிறார்கள்.

ராமவ தாரமுற்று - ஐலசா
தென்னிலங்கை ஆண்டுவந்த - ஐலசா
ராவணனைச் சங்கரித்தாய் - ஐலசா
கோமனையில் தேவகிக்கு - ஐலசா
தவத்தை நிறைவேற்ற - ஐலசா
குழந்தையாய் அவதரித்தாய் - ஐலசா
எள்ளளவாய் நின்றகண்ணா - ஐலசா

8. சொக்கத் தங்கம் ஜம்புலிங்கம்

அந்தக் காலத்தில் அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் தெருக்கூத்து நடக்கும். கூத்திலே கள்ளன் வேஷம் போட்டுக் கொண்டு ஒருவன் வருவான். வரும்போது அவன் சும்மா வரமாட்டான்.

தந்தானமடி தந்தானமடி
தந்தானக் குயிலே - மயிலே
தந்தானக் குயிலே - மயிலே
தந்தானக் குயிலே

தந்தானென்கிற பாட்டுப்பாடி
வந்தேன் சபையிலே - அப்பாடா
வந்தேன் சபையிலே - அப்பாடா
வந்தேன் சபையிலே.

என்று பாடிக்கொண்டே வருவான். பலமாகச் சத்தம் போடுவான். பாய்ந்து பாய்ந்து குதிப் பான். அவன் ஆடு வதையும் பாடு வதையும் மக்கள் மிகவும் ரசிப்பார் கள். கை தட்டி ஆரவாரம் செய் வார்கள்.

கோட்டை
கொத்தளம்
மேலேஏறிக்
கூசாமே
ஓடிடுவேன்
அப்பாடா



கூசாமே ஓடிடுவேன் - அப்பாடா
கூசாமே ஓடிடுவேன்

என்று கோட்டை மேல் ஏறுவது போலவும், தைரியமாக ஓடுவது போலவும் நடித்துக் காட்டுவான். நடுநடுவிலே அவன் சிறையில் இருந்த பெருமையையும் கூறுவான்.

மெட்ருசு ஜெயிலிலே நான்
மெடலுப் பெற்றவண்டா - அப்பாடா
மெடலுப் பெற்றவண்டா - அப்பாடா
மெடலுப் பெற்றவண்டா

இதே போல், மேடையில் தோன்றும் மற்ருெரு கள்ளன் பாடுகிருன்.

கள்ளப்பாட்டுக் கற்றுக்கொண்டு
கணக்கா வந்தேனே - கன்னக்கோலைக்
கையில் எடுத்தேனே - கட்டிடத்தை
நாசம் செய்தேனே.

இப்படிப் பல பாடல்களைக் கள்ளன் வேஷம் போடுபவர்கள் பாடுவதுண்டு. இத் தகைய பாடலைக் 'கள்ளன் பாட்டு' என்றும், 'திருடன் பாட்டு' என்றும் சொல்லுவார்கள்.

கள்ளன் பாட்டிலே இரண்டு வகை உண்டு. ஒன்று, கூத்து மேடையில் தோன் றும் திருடன், தன் பெருமைகளைப் பற்றித் தானே பாடுவது. மற்ருென்று, அந்தக் காலத்

தில் வாழ்ந்த சில திருடர்களைப் பற்றிப் பாமர மக்கள் பாடியது.

சந்தனத்தேவன், சூரியமூர்த்தி, ஜம்புலிங்கம், மணிக்குறவன் என்ற கொள்ளைக்காரர்களைப் பற்றித் தமிழ் நாட்டில் பல பாடல்கள் வழங்குகின்றன. கொள்ளையடிப்பது கேவலமான தொழில் என்பதை மக்கள் அறிந்திருந்தனர். ஆனாலும், இந்தத் திருடர்களைப் பற்றி அவர்கள் பாடியதற்குக் காரணங்கள் இருந்தன. அநியாயமான வழியில் பணம் சம்பாதித்தவர்களையும், ஏழைகளை வாட்டி வதைத்து வந்த பணக்காரர்களையுமே இத்திருடர்கள் கொள்ளையடித்தார்கள். இப்படிக் கொள்ளையடித்த பொருள்களை அவர்கள் தங்களிடமே வைத்துக்கொள்ளவில்லை. ஏழை எளியவர்களுக்கு வாரி வாரி வழங்கினார்கள்.

நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, திருநெல்வேலிப் பகுதியில் ஜம்புலிங்கம் என்ற திருடன் இருந்தான். பணக்காரர்களுக்கு எதிரியாகவும், ஏழைகளுக்கு நண்பனாகவும் அவன் இருந்தான். அவன் செய்த வீரதீரச் செயல்களைக் கண்டு அக்கால மக்கள் வியப்புற்றார்கள். அவனைத் தமிழ்

நாட்டு ராபின்ஹூட் (Robinhood of Tamilnad) என்றுகூடச் சிலர் சொன்னார்கள்.

இங்கிலாந்தில் ராபின்ஹூட் என்ற ஒரு கொள்ளைக்காரன் இருந்தான். அவன் காலத்திலே இருந்த அரசன் மிகவும் பொல்லாதவன். குடிமக்களைக் கொடுமைப்படுத்திச் செல்வம் திரட்டினான். ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தினான். அவனை மக்கள் எல்லோரும் வெறுத்தார்கள். அந்தக் கொடுங்கோல் அரசனுடைய சொத்துக்களை ராபின் ஹூட் மிகவும் துணிச்சலாகக் கொள்ளையடித்தான். கொள்ளையடித்த பொருள்களை மக்களுக்குத் தாராளமாக அள்ளிஅள்ளிக் கொடுத்தான். அதனால், அவனைப் பற்றி ஆங்கிலத்திலே பல நாடோடிப் பாடல்கள் பாடப் பட்டன. அவனைப் போலவே ஜம்புலிங்கமும் பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஏழை மக்களுக்கு உதவி வந்தான்.

ஜம்புலிங்கத்தைப் பற்றி அந்தக் காலத்துப் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வெளிவரும். எல்லாம் திடுக்கிடத்தக்க செய்திகளாக இருக்கும். அவனைப் பற்றிப் பல நாடோடிப் பாடல்கள் நாட்டிலே எழுந்தன.

அவற்றில் சில பாடல்களை இங்கே காணலாம். ஒவ்வொரு பாட்டும்,

வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்

என்ற வரிகளோடு முடிகிறது.

ஜம்புலிங்கத்திற்குத் தமிழ், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகள் தெரியுமாம். ஆங்கிலத்தில் பி.ஏ., எம்.ஏ. படித்தவனும்!

மாந்தோப்புக் குள்ளே போயி
மலையாளம் எல்லாம் பேசித்
தென்னந்தோப்புக் குள்ளே போயி
செந்தமிழும் நல்லாப் பேசி
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

எப்.ஏ., பி.ஏ. படித்து
எப்போதும் இங்கிலீஷ் பேசி
தப்பாமே தாய்பாஷையையும்
சிப்பாய்போலத் தான்படித்து
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

ஜம்புலிங்கம் ஆள் எப்படி இருப்பான்? அவனை நமது கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றன சில வரிகள்.



ஆளிலே அழகானவன்
ஆசார போசனவன்
தோள்கள் பருத்த
மன்னன்
தொடை உருண்டு
திரண்ட மன்னன்
வாரார் சொக்கத்
தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

முறுக்கிவிட்ட மீசை
யோடே
முன்னம்பல் வரிசை
யோடே
மினுக்கிவிட்ட கத்தி
யோடே
மின்னுங்கையில் வெடி
களோடே
வாரார் சொக்கத்
தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

சுற்றத்தாரை விட்டுச் சொந்த வீட்டையும் விட்டு அவன் தருமம் செய்வதற்காகவே திருட்டுத் தொழிலில் ஈடுபட்டானும்! அவன் 'மனத்தில் வைத்திருப்பது தரு

மம், கையில் பிடித்திருப்பது தைரியம் ' என்று கூறுவது எவ்வளவு அழகாயிருக்கிறது!

தாய்பிள்ளை எல்லாம்விட்டுத்
தன்வீட்டையுங் கூடவிட்டுத்
தர்மத்தை மனசில்வைத்துத்
தைரியத்தைக் கையில்பிடித்து
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

ஆருயிரம் புலி கரடி பதுங்கியிருக்கும் காட்டிலே, அழகான சிங்கம்போல, அஞ்சாமல் துணிச்சலோடு பாட்டுப் பாடிக் கொண்டே வருவானும்.

ஆருயிரம் புலிகரடி
அடைந்திருக்கும் கானலிலே
அம்சமுள்ள சிம்மம்போலே
அமுலோடேதான் பாட்டுப்பாடி
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

அவனைத் தேடிப் பிடிப்பதற்குச் சிவப்புத் தொப்பி அணிந்த போலீஸ்காரர்களை அனுப்பி வைப்பார்களாம். அவர்கள் போலீஸ் வண்டியை விட்டு இறங்குவார்களாம். அப்போது

'ஜம்புலிங்கம்' என்று யாராவது சொன்ஞலும் போதுமாம்; அவர்களுக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டுவிடுமாம்! 'இந்த வம்பிலே மாட்டிக்கொண்டு ஏன் பிராணனை விட வேண்டும்?' என்று எண்ணி மறுவிஞடியே அவர்கள் வண்டியில் ஏறிவிடுவார்களாம்!

செந்தலைப் புலிகளெல்லாம்
ஜம்புலிங்கம் பேரைக்கேட்டு
வம்பிலேஏன் மாளணுமுண்ணு
வண்டியிலே ஏறையிலே
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

போலீஸ்காரர்கள் அவனைத் தேடிப் போவது இருக்கட்டும். அவன் போலீஸ் காரர்களைத் தேடிப்போய் என்னென்ன குறும்புகள் செய்வாஞம்?

சப்இன்ஸ்பெக்டர் சட்டையை
சந்தடி ஒன்றும் இல்லாமே
சல்லாபமாத் தான்கழற்றி
உல்லாசமாப் போட்டுக்கொண்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

குதிரைமேலே ஏறிவர
குதிரைக்காரன் ஓடிவர

குறுக்கேநின்ற போலீஸ்காரன்
கும்பிட்டொரு பக்கம்நிற்க
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

ஜேப்புக்குள்ளே கையைவிட்டுச்
சின்னப்பென் சிலேஎடுத்து
பீட்டு நோட்டை யுந்திறந்து
போட்டுவிட்டுக் கையெழுத்து
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

முந்நூறு பேர்வளைக்க
முள்ளம்பன்றி போல்உலுப்பி
மூன்றுபேரைப் பஸ்பம்பண்ணி
முள்ளுவேலி யெல்லாந்தாண்டி
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

லட்சாதிபதிகளைக்கூட அவன் லட்சியம் செய்யமாட்டானும். பணக்காரர்களை அவன் பாடாய்ப் படுத்துவானும்.

லட்சாதி பதியைஎல்லாம்
லட்சியம் ஒன்றும்பண்ணுமே
வெட்கப்படுத்தியும் பற்ருமே
விரட்டிவிரட்டி அடித்துவிட்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

உயிரைக்கையி லேபிடித்து
ஓடிஞரே பணக்காரர்
சாடி அவரைப் பிடித்து
சங்கிலியில் கட்டிவைத்து
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

பணக்காரரைப் பழித்துக்காட்டப்
பாவப்பட்ட வர்களைக்கூட்டிப்
பணத்தைப் பறித்துக்கொண்டு
பதறப்பதற விட்டுவிட்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

பணக்காரரை லட்சியம் செய்யாமல் பணத்தைப் பறிப்பான். அப்படிப் பறித்த பணத்தையும் அவன் லட்சியம் செய்யமாட்டாஞம்! ஏழைகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பாஞம். அன்னதானம் செய்வாஞம். புல்லுக்கட்டுக்காரிக்கும், நெல்லறுப்பவளுக்கும் நகைகளைப் போட்டு அனுப்புவாஞம். அவனைக் கையெடுத்துக் கும்பிட்டவர்களுக்கெல்லாம் கைநிறைய, பைநிறையப் பணம் கொடுப்பாஞம். கூன், குருடு, முடவர்களுக்கு மிகவும் உதவுவாஞம்.

ஆயிரரு பாயை அவர்
அரைக்காசென்று தான்எண்ணி

அள்ளிஏழைக் கிறைத்துவிட்டு
அன்னதானம் செய்துவிட்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

பில்லுக்காரப் பெண்பிள்ளைக்குப்
பேரைச்சொல்லிப் பிழைத்துக்
நல்லநல்ல நகைகளெல்லாம் [கண்ணு
நல்லமனசாப் பூட்டிவிட்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

நெல்லறுக்கப் போனவளை
நிற்கவைத்துப் பாதையிலே
சொக்கத்தங்க நகைகளெல்லாம்
பக்குவமாய்ப் பூட்டிவிட்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

கையெடுத்த பேருக்கெல்லாம்
கைநிறையப் பணங்கொடுத்து
பைகளைத் திறக்கச் சொல்லி
பற்றுததுக்கும் போட்டுரொப்பி
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

கையில்லாத ஏழைகளுக்கும்
கால்இல்லாத ஏழைகளுக்கும்
கண்இல்லாத ஏழைகளுக்கும்
கஞ்சிதர்மம் கொடுத்துவிட்டு

வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

இவ்வளவும் செய்கிறானே, அவனுடன் ஒரு பெரிய கொள்ளைக்கூட்டமே இருக்குமோ என்ற சந்தேகம் நமக்கு ஏற்படுகிறதல்லவா? அப்படி ஒன்றுமில்லையாம். கொள்ளையடிப் பதில் அவனுக்குத் துணையாக அவனுடைய மைத்துனன் ஒருவன் மட்டுமே இருந்தானும்!

ஆறும் இல்லே, நூறும் இல்லே
ஆளும் இல்லே பேரும் இல்லே
தானே தான் மச்சானோடே
தக்கபடி அடிச்சுக்கிட்டு
வாரார் சொக்கத் தங்கம் - நம்ம
நாடார் ஜம்பு லிங்கம்.

தானதர்மம் செய்வதற்காகக் கொள்ளை யடித்தாலும் சட்டப்படி அது குற்றம்தானே? போலீஸ் இலாகாவில் பலர் அவன் பெயரைக் கேட்டு நடுநடுங்கினாலும், சிலர் எப்படியும் அவனைப் பிடித்துவிடுவது என்ற உறுதியுடன் அலைந்தார்கள். கடைசியில் ஜம்புலிங்கம் பிடிபட்டுவிட்டான். போலீஸ்காரர்கள் அவனைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். எப்படி அவன் அகப்பட்டான்?

அவனை ஒருத்திக் காட்டி கொடுத்து விட்டாள். அவள் வேறு யாருமல்ல ; அவனுடைய ஆசைநாயகியேதான் ! அவனுக்கு ஓர் அத்தை மகள் இருந்தாளாம். அவளை வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, மற்றப் பெண்களின் மேல் ஆசை வைத்ததால்தான் அவன் மோசம் போனனும்.

அத்தை மகளைச் சட்டைபண்ணுமே
அந்நியப் பெண்கள்மேலே
ஆசைவைத்துப் போனதாலே

மோசம் போன'தாகவும் அந்தப் பாட்டிலே வருகிறது.

(பாடல்—' மலையருவி' நூலிலிருந்து.)

நன்றி

இத்தொகுப்பை வெளியிடக் கீழ்க்கண்ட நூல்கள் பெரிதும் உதவின. அந்நூலாசிரியர்களும், தஞ்சை சரஸ்வதி மகால் நிர்வாகிகளும் மனமுவந்து அனுமதி யளித்ததற்காக, அவர்களுக்கு ஆசிரியர், தமது மனங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

மலையருவி — சேகரித்தவர் : திரு. பர்ஸி மாக்வீன், தொகுப்பாசிரியர் : திரு. கி. வா. ஜகந்நாதன், வெளியிட்டோர் : தஞ்சை சரஸ்வதி மகால், தஞ்சை.

தமிழர் நாட்டுப் பாடல்கள் — தொகுப்பாசிரியர் : திரு. நா. வானமாமலை, சேகரித்தவர்கள் : எஸ். எஸ். போத்தையா, எஸ். எம். கார்க்கி, எம். பி. எம். ராஜவேலு, குமாரி பி. சொர்ணம், கவிஞர் எஸ். எஸ். சடையப்பன், கு. சின்னப்ப பாரதி, வாழப்பாடி சந்திரன், வெளியிட்டோர் : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

ஏட்டில் எழுதாக் கவிதைகள் — ஆசிரியர் : செ. அன்னகாமு, வெளியிட்டோர் : திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

நாடோடி இலக்கியம்,

குழந்தைப் பாடல்கள் — ஆசிரியர் : கி. வா. ஜகந்நாதன், வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், சென்னை.

காற்றிலே மிதந்த கவிதை — ஆசிரியர் : மு. அருணாசலம், வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், சென்னை.

தாலாட்டுப் பாடல்கள் — ஆசிரியர் : ஆறு. அழகப்பன், வெளியிட்டோர் : பாரி நிலையம், சென்னை.

செட்டி நாடும் தமிழும் — ஆசிரியர் : சோமலெ, வெளியிட்டோர் : பாரி நிலையம், சென்னை.

23838

புதிதாகக் கற்றவர்க்கான வெளியீடு

- பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்
- விழவும் பூசையும்